# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 5. அத்தியாயம் 3.

### சத்தியாக்கிரகம் பயமுறுத்தலா?

நான் பம்பாயிலிருந்து என் சகோதரரின் விதவையையும் மற்ற பந்துக்களையும் பார்ப்பதற்காக ராஜகோட்டை, போர்பந்தர் முதலிய இடங்களுக்குச் சென்றேன்.

தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தபோது என் உடையில் மாறுதல் உண்டாக்கினேன். தொழிலாளர்களுடன் வசிப்பதற்கேற்ற உடையை அணிய ஆரம்பித்தேன். ஆனால் பம்பாயில் வந்திறங்கும்போது மட்டும் சத்திய வார் முறையில் என் உடுப்புகளை அணிந்தேன். ஆனால் பம்பாயிலிருந்து கத்தியவாருக்கு நான் மூன்றுவது வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தபடியால் மேல் அங்க வஸ்திரம் முதலியனவும் அநாவசிய மென்று கருதி, பத்து அணா விலையுள்ள காஷ்மீரத் தொப்பியொன்றைவாங்கிப்போட்டுக் கொண்டேன். அவ்வாறு உடை அணிந்து கொண்ட ஒருவன் ஏழைகளோடு ஏழையாகக் கலந்து வித்தியாசமில்லாமல் போய்விடலாம்.

அப்போது அப் பிரதேசங்களில் பிளேக் என்னும் தொத்து வியாதி அதிகமாக இருந்தபடியால் மூன்றுவது வகுப்புப் பிரயாணிகளை வீரம்காம் என்னுமிடத்தில் வைத்திய பரிசோதனை செய்தனர். அவ்விஷயம் எனக்கு ஞாபகமில்லை. அப்போது எனக்கு உபாயமாக சுரம் இருந்தது. அங்கே இருந்த வைத்திய பரிசோதகர் நான் ராஜகோட்டைக்குப் போய்ச் சேர்ந்ததும் டாக்டரிடம் போய் என் தேக நிலையைக் காட்டும்படி கூறிவிட்டு என் பெயரைக் குறித்துக் கொண்டார்.

ஆனால் நான் வீரம்காம் வழியாகப் பிரயாணம் செய்கிறேனென்பதை யாரோ முன்னதாக அறிவித்து விட்டார்கள். அதன் மீது தையல் வேலை செய்யும் மோதிலால் என்பவர், அவ்வூரில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர் என்னை ஸ்டேஷனில் சந்தித்தார். அவர் எனக்கு வீரம்காம் வைத்திய பரிசோதனையைப் பற்றியும், அதனால் ரயில்வே பிரயாணிகள் அடையும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றியும் என்னிடம் கூறினார். ஆனால் எனக்கு சுரம் இருந்ததால் நான் அதைப்பற்றி அதிகம் பேச விரும்பாமல் சுருக்கமாக முடித்து விட்டு அவரைப் பார்த்து, "நீர் சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கிறீர்களா?" என்று கேட்டேன். அவ்வாறு கேட்கும் போது மோதிலாலும் சில இளைஞர்களைப் போல் நீரயோசிக்காமல் அவசரப்பட்டு ஏதையேனும் சொல்லி விடுவாரென்று நினைத்தேன். ஆனால் அவர் நீரயோசித்து, "நாங்கள் நிச்சயமாகச் சிறைக்குச் செல்வோம். ஆனால் தாங்கள் தான் எங்களை நடத்திச் செல்லவேண்டும். தாங்கள் இப்போது தங்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஊருக்குப் போன பின்னர் ஒரு முறை இங்கு வந்து வீரம்காம் கஷ்டங்களை யொழிப்பதில் எங்களுக்குத் தலைவராக இருக்கவேண்டும். இளைஞர்களாகிய நாங்கள் என்ன வேலை செய்கிறோமென்பதைத் தாங்கள் கண்டு களிக்கவேண்டும். தாங்கள் கூப்பிடும் போது நாங்கள் உழைக்கத்தயாராயிருக்கிறோம்" என்று விடையிறுத்தார்.

### தையல்காரர் தேச பக்தி.

இதனால் மோதிலாலைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். அதற்கேற்றவாறு அவருடன் இருந்த நண்பர் ஒருவரும், "நம் நண்பர் எளிய தையல்காரராக இருந்தபோதிலும், அவர் அவ்வேலையில் தக்க தேர்ச்சியுடையவராதலால் அதி எளிதில் தன் செலவுக்கு வேண்டிய ரூபா 15 ஐ சம்பாதித்து விடுகிறார். இவருடைய செயலைக் கண்டு கல்வி கற்றவர்களென்று கூறிக்கொள்ளும் நாங்களும் வெட்கமடைய வேண்டியதாக இருக்கிறது" என்று மோதிலாலைப்பற்றிப் புகழ்ந்து பேசினார்.

பிறகு நான் மோதிலாலுடன் நெருங்கி [illegible] கூறியது மிகைப்பட்டதல்ல வென்று அறிந்தேன். அவர் தான் புதிதாக ஆரம்பித்த ஆசிரமத்தில் சில நாட்கள் தங்கி எங்கள் ஆசிரம மாணவர்களுக்குத் தையல் வேலை கற்றுக் கொடுத்ததுடன் எங்களுக்கு ஆக வேண்டிய தையல் வேலைகளையும் செய்து கொடுத்தார். அவர் அப்போது அடிக்கடி என்னிடம் வீரம்காம் கஷ்டத்தைப்பற்றித் தான் பேசிக்கொண்டிருந்தார். அவர் நல்ல யௌவனத்தில் திடீரென்று ஏற்பட்ட அசௌக்கியத்தால் காலமாய் விட்டபடியால் வாத்வான் அவரில்லாமல் பொது வேலையில் நஷ்டமடைந்து விட்டது.

நான் ராஜகோட்டை வந்து சேர்ந்ததும் மறுநாளே டாக்டரிடம் போய் என் தேக நிலையை அறிவித்தேன். நான் அவ்விடத்தில் செல்வாக்குப்பெற்றவனாதலால் டாக்டர் வெட்க மடைந்து வைத்திய பரிசோதகர்மீது கோபித்துக் கொண்டார். ஆனால் வைத்திய பரிசோதகர் தன் கடமையைச் செய்ததில் குற்றமொன்றுமில்லை. அவருக்கு நான் தெரியாது. இருந்தாலும் வேறுவிதமாக நடந்து கொண்டிருந்தால் அது அவருடைய குற்றமே யாகும். நான் மறுபடியும் டாக்டரிடம் வருவது டாக்டருக்குப் பிடிக்கவில்லையாதலால் அவரே ஒரு வைத்திய பரிசோதகரை என்னிடம் அனுப்பினார்.

### மூன்றுவது வகுப்புப் பிரயாணிகள் கஷ்டம்.

மூன்றுவது வகுப்புப்பிரயாணிகளைச் சுகதார நிலைமையின் பொருட்டேனும் அத்தகைய காலங்களில் பரிசோதனை செய்வது நீதியான காரியமேயாகும். பெரிய மனிதர்கள் மூன்றுவது வகுப்பில் பிரயாணம் செய்யச் சம்மதப்பட்டால், அதனால் வரும் கஷ்டங்களையும் அனுபவிக்கத்தயாராக இருக்கவேண்டும். ஏனெனின் உத்தியோகஸ்தர்கள் பக்ஷபாதமில்லாமல் தான் நடந்து கொள்ளவேண்டியிருக்கும். ஆயினும் எனக்குத் தெரிந்தவரையில் ரயில்வே அதிகாரிகள் மூன்றுவது வகுப்புப் பிரயாணிகளைத் தங்கள் சகோதரர்களைப் போல் மனதிலும் கருதாமல், அவர்களை ஆடுமாடுகளைப் போல் கருதுகின்றனர். அவர்களை மிக்கக் கேவலமாக அழைக்கின்றனர். அவர்களுடைய நியாயமான வாதங்களுக்கும் சரியாகப்பதில்சொல்வதில்லை. ரயில்வே உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு அக்கிரமங்களைச் செய்தாலும் பிரயாணிகள் அவர்களுடைய அடிமைகளைப்போல் நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றனர். இத்தகைய கஷ்டங்களையெல்லால் நானே நேரில் பார்த்திருக்கிறேன். கற்றவர்களும், செல்வர்களும் கஷ்டங்களுக்கு உட்பட விரும்பி மூன்றுவது வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்து ஏழைகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யப்பாடுபட வேண்டும்.

நான் கத்தியவாரில் எங்கே போனாலும் ஜனங்கள் வீரம்காம் கஷ்டங்களைப்பற்றியே அதிகம் முறையிட்டார்கள். ஆதலின் முன்பு பம்பாய் கவர்னர் லார்டு வில்லிங்டன் கொடுத்த அனுமதியை உபயோகித்துக் கொள்ளலாமென்று யோசித்து வீரம்காம் விஷயமான எல்லாத் தகவல்களையும் திரட்டிக் கொண்டேன். உடனே பம்பாய் சர்க்காருடன் கடிதப்போக்குவரத்துகள் நடத்த ஆரம்பித்தேன். நான் கவர்னரையும் அவருடைய அந்தரங்கக் காரியதரிசியையும் கண்டு பேசினேன். ஆனால் அவர்கள் தங்கள் அனுதாபத்தைக் காட்டிவிட்டு இந்தப் பொறுப்பு இந்தியா சர்க்காருக்குச் சம்பந்தப்பட்டதென்று கூறிவிட்டார்கள்.

எனவே நான் இந்திய சர்க்காருடன் இவ்விஷயமாகக் கடிதப் போக்குவரத்து நடத்தினேன். அவர்கள் என் கடிதங்களைப் பெற்றதாகத் தெரிவித்தார்களே யொழிய ஒன்றுக்கும் பதில் அளிக்கவில்லை. ஆனால்பிறகுநான் லார்டு செம்ஸ் போர்டை நேரில் பார்க்க நேரிட்டபோது அக்குறைகள் ஒழிந்தன. நான் இவ்விஷயமாக அவரிடம் கூறியபோது அவர் தமக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாதென்று கூறி [illegible] மாகக் கேட்டுத் தக்க முயற்சி [illegible] தாகக் கூறினார். பிறகு சில நாட்களுக்குள் இக்கஷ்டம் ஒழிந்த தென்று பத்திரிகைகளில் படித்தேன்.

### சத்தியாக்கிரகத்தின் பொருள்.

இச்சம்பவத்தையும் நான் ஒரு சிறு சத்தியாக்கிரக மென்றே கருதுகிறேன். ஏனெனின் நான் பம்பாய் சர்க்கார் காரியதரிசியுடன் சம்பாஷித்தபோது நான் பகாஸ்ரா என்னுமிடத்தில் சத்தியாக்கிரகத்தைப்பற்றி உபன்யாசித்ததைப் பார்க்கும்போது அவ்வாறு அதை அவர் பார்க்க முடியாதென்று கூறிவிட்டு, "அது பயமுறுத்தல் அல்லவா? வல்லமையுள்ள சர்க்கார் இத்தகைய பூச்சாண்டித் தனத்துக்கெல்லாம் அடங்கிவிடுமா?" என்று என்னைப்பார்த்துக் கேட்டார்.

அதற்கு நான், "இது பயமுறுத்தல் அல்ல; ஆனால் ஜனங்களுக்கு அறிவுறுத்துவதாகும். அவர்களுடைய குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளக்கூடிய முறைகள் என்ன என்பதுபற்றிஜனங்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டியது என் கடமையாகும். சுதந்திரம் பெற விரும்பும் தேசம் விடுதலை பெறுவதற்குரிய வழிகளைத் தேடிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அவர்கள் பொதுவாக மிருகபலத்தையே கடைசியான முறையாகக் கொள்வது வழக்கம். ஆனால் சத்தியாக்கிரகம் அஹிம்சையோடு கூடியதாகும். அதை விவரிக்க வேண்டியது என் கடமை என்று நினைக்கிறேன். பிரிட்டிஷ் சர்க்கார் சர்வவல்லமையுள்ளது தான் என்பதை நான் அறிவேனாயினும், அதையும் அடக்குவதற்கு சத்தியாக்கிரகமே ஏற்றவழி என்பதில் எனக்கு மிக்க நம்பிக்கை உண்டு" என்று பதில் அளித்தேன்.

திறமைவாய்ந்த அக்காரியதரிசி மிக்க தந்திரமாகத் தலையை யசைத்து, "நாம் பார்ப்போம்" என்று கூறினார்.

# வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

## 10-வது அத்தியாயம்.

### பருந் திடங் கோபம் பலிக்கவே யில்லை.

மழை ஆகாயத் தாமரையா யிருந்ததால் செடி கொடிகள் வாடிச் சோர்ந்து, தரித்திரத்தாலும், கடனாலும் பீடிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களைப் போலும், நமது வைதீகரின் முகம் போலு மிருந்தன. பயிர்கள் காய்ந்ததால் வெள்ளாண்மை செய்த குடியானவர்களின் மனம் வருத்தத்தில் நீந்தியது. மனம் துக்கத்தின் கேசத்தை சம்பாதித்துக் கொண்டதால் அங்குள்ள நிலத்தோர்முகங்களெல்லாம் அங்குள்ள பயிர்களின்முகம் போலிருந்தன. மழையுண்டானால், விவசாயம், வியாபாரம், கைத் தொழில், சுகசந்தோஷ மெல்லாமுண்டு. மழை யில்லையானு லெல்லாமில்லை. பஞ்சத்தின் நர்த்தனம் அங்கு பலமா யிருந்தது. கொலை, களவு வெகு மலிவு. தீயோர் மனம் போல வெய்யில் கொடுமையாக அடித்தது.

வைதீகருக்குத் தண்ணீர்த் தாகம் உண்டானது. ஒரு வீட்டில் போய் தீர்த்தம் வேண்டு மெனக் கேட்டார். உள்ளே யிருந்த பையன் ஒரு செம்பில் ஜலம் கொண்டு வந்து கொடுத்தான். வைதிகரதை அருந்திக் கொண்டிருக்கும் சமயத்தில் உள்ளே யிருந்த பெரியவ ரொருவ ரோடி வந்து வைதீகர் குடித்துக் கொண்டிருந்த செம்பைப் பிடித் திழுத்து, அருந்த வேண்டாம்; இத் தீர்த்தம் மொள்ளப்பட்ட பானையில் எலி இறந்து கிடக்கிறது; விஷமென்றார்.

வைதீகர் கோபத்தோடு கலந்த வருத்த மடைந்து அடுத்த வீடு சென்று தாகத்திற்குத் தீர்த்தம் தேவை யென்றார். ஒரு மாது செம்பில் ஜலம் கொடுத்தாள். உடனே வைதீகர் வானத்தைப் பார்த்த வண்ணமாக வாயை ஆ வெனத் திறந்து கொண்டு செம்பைத் தூக்கி உயர்த்தி ஜலத்தை வாயி லூற்றிப் பருகினார். அந் நேரத்தில் அவர்க்கு மேலாக ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த பருந்து ஒன்று எச்ச மிட்டது. அவ் வெச்சம் நம் வைதீகரின் முகத்திற்கு நேராக வந்து பாதி கண்ணிலும், மீதி வாயிலும் விழுந்தது. வாயில் விழுந்த எச்சம் ஜீவாத்மா முக்தி யடைந்து பரமாத்மாவோடு இரண்டறக் கலப்பது போல ஜலத்தோடு கலந்து தொண்டையாகிய மடைவழி சென்று குடலாகிய தெப்பக் குளத்தில் போய்ச் சேர்ந்தது. வைதீகருக்கு வயிற்றெரிச்ச லடியோடு பற்றியெரிந்தது. முன் கொக்கைச் சாம்பலாக்கிய கொங்கணவருக்குப் போன்ற தவ பலம் நமது வைதீகருக் கிருந்திருந்தால், தன்னை அவமானத்திற் குட்படுத்தியபருந்தை சிவபெருமான்மதனை நெற்றிக் கண்ணாலெரித்தது போலெரித்திருப்பார். ஆனால் வாசுகி முன் கொங்கணவருக்கிருந்த வல்லமையே தற்போது நமது வைதீகருக்கிருந்தது. என் செய்வது? பலர் நகைக்கத் தான் தலை குனிய நேர்ந்து விட்டது. யானை யென் செய்வது? முனியுங் கவலையுந் தோன்றிப் பய னென்? வீர சக்தியன்றோ தேவை? ஒன்றை நினைத்தாலது ஒழிந்து விட்டு வேறொன் றுதித்து விடுகிறது. நம் மிஷ்டம் போல் தெய்வ சகாயத்தால் சில கை கூடிவிடின் மமதை உச்சியி லேறிக் கொள்கிறது. அகங்காரம் நல் வரவு கூறி விருந்து வைக்கிறது. திடீரென்று ஒன்றை நினையாது முன் வந்து தோன்றிவிடுகிறது. எல்லா மெனை யாளு மீசன் செய லெனும் நம் பண்டையக் கிழவி வாக்கை மறவாதிருத்தலே சிறப்பு. தாகத்தைத் தீர்க்கச் சென்றவிடத்தில் வைதீகருக்கு அவமானம் நேர்ந்து விட்டது. மனிதன் எதிர்பார்த்தபடி—இஷ்டப்படி எல்லாம் முடிகிற தில்லை. மனித னிஷ்டப்படி யெல்லா முடிகிறதா யிருந்தால் தெய்வத்திற்கு வேலை யில்லாது போவதோடு உலகம் இந் நிலையி லிராது. லாப மடைய வேண்டு மெனக் கைக்கொளப்படும் வியாபாரம், விவசாயம், கைத் தொழில் நஷ்டத்திலும் முடிந்து விடும். நினைப்ப தொன்று முடிவது வேறு. மேல் வஸ்திரத்தால் கண்ணைத் துடைத்தார் வைதீகர். செம்பைக் கொடுத்தார். கங்கைக்குச் சென்றார். பல தீட்டுக் கொரு முழுக் கென மூழ்கினார். கங்கா தேவியும் வைதீகரின் பேதைப் புத்தியைச் சிறிது மாற்றி ஆசீர் வதித்தாள். பூஜையை முடித்தார்.

ஒய்வு சரீ ராரோக்கியத்திற்கு ஜீவ நாடி. களைப் பெனும் பிணிக்கு ஒய்வே ஔஷதம். தேகத்திற்கு மாத்திர மல்ல; மனதிற்கு மப்படியே. ஓய்வு புது சக்தியையும், சுறு சுறுப்பையும், மன மகிழ்ச்சியையும் பரிசளிக்கும். இறைவன் கூட ஓய்வின் அவசியத்திற்காகவே நித்திரையையும், இரவையு முண்டாக்கி யிருக்கிறார்.

களைப்பு மேலிட்ட வைதீகர் கங்கைக் கரையின் பக்கத்திலுள்ள ஒரு விருக்ஷத்தின் கீழ் போய் உட்கார்ந்து சிந்தனையிடம் நேசம் செய்தார். வாழ்க்கையின் முடிவு வரை எப்படிப்பட்டவரும் கஷ்டங் கவலை அனுபவியாமலிரார். நாம் பாவத்தை யொழித்த இக் கங்கையில் தானே பண்டையில் ஒரு சம்பவம் நடந்ததாம். ஸ்ரீ ராமர் க்ஷத்திரியர். குகன் வேடன். இவர்களிருவருக்கும் சாதி விஷயத்தில் பார்த்தால் எணி வைத்தாலும் எட்டாது. அவதார புருஷரான ஸ்ரீ ராம பிரான் கூட சாதி வித்தியாசம் பார்க்க வில்லை. அன்பினால் பிணைக்கப்பட்டிருந்தார். க்ஷத்திரிய ராஜன் வேட ராஜனால் விருப்புடன் கொடுக்கப்பட்ட விருந்தை விருப்புட னருந்தினான். சகோதர அன்பினும்—பாசத்தினும் பெரியதாகிய இந் நேச பாசத்தை—கரை கடந்த அன்பை யென்னென் றியம்புவது! அறுபத்து மூன்று நாயன் மார்களை ஈஸ்வரன் எவ்விதமான வித்தியாசமும் பார்க்காது ஏற்றருளி யிருக்கிறானே. வள்ளுவரைக் காட்டிலு முயர்ந்த—மேன்மையான—இல்லற ஞான மனித னுண்டா? இல்லையே. அப்படி

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## வாலிப நாடார் 3 வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

### உபசரணைக்கமிட்டிக் கூட்டம்.

எற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபடி ஸ்ரீமான். முதலாளி, மு. மு. முத்துச்சாமிநாடாரவர்கள் ஞாபகச்சின்ன வாசகசாலையில் உபசரணைக் கமிட்டி வைஸ் சேர்மன் ஸ்ரீமான் பெ. சிவ. பெ. பழனிச்சாமி நாடார் அவர்கள் அக்கிராசனத்தில்கீழ் இரவு சுமார் 8-மணிக்கு கடவுள் வணக்கம் பாடப்பெற்றபின் கூட்டம் ஆரம்பமாகிற்று. காரியதரிஸி அவர்களால் வெளியூர் பிரமுகர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கும் தந்தி தபால்கள் வாசிக்கப்பட்டபின் மகாநாட்டுத் தலைமை வகிப்பதற்காக "நவசக்தி" ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களை வேண்டிக்கொள்ள வேண்டுமென்று வாலண்டியர் ஜெனரல் கேப்டன் ஸ்ரீமான் ச. சு. பழனிச்சாமி நாடாரவர்கள் ஒரு தீர்மானம் கொணர்ந்து பிரேரிக்க, ஸ்ரீமான் பெ. சிவ. பெ. எனுகிநாதன் அவர்கள் ஆமோதிக்க, ஸ்ரீமான் அ. கு. அண்ணாமலை அவர்கள் ஆதரிக்க அத்தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

தூத்துக்குடி ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல்நாடார் ஞாபகார்த்த வாசகசாலை காரியதரிசி திருவாளர். அ. து. கலியாணசுந்தரம் அவர்கள் மகாநாடு வெகு சிறப்பாய் நடைபெறத் தம்மாலான ஒத்தாசைகள் புரிவதாகப் பேசியதின் பின்னால் இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

## எந்த ஞானனந்த சுவாமிகள்?

### "குடியரசு" கூறவேண்டும்.

18-5-28ல் வெளியீடான "குடியரசு" பத்திரிகையில் "ஆலயங்கள் இருக்க வேண்டுமா?" "தெய்வங்களின் யோக்யதை" என்ற தலைப்பு வாய்ந்த ஒரு வியாசம் கண்டோம். அவ்வியாசம் "ஞானனந்த சுவாமிகள்" எழுதியதாகக் காணப்படுகிறது. ஞானனந்த சுவாமிகள் பலர் இருக்கலாம். ஆதலால் மேற்கண்டதை எழுதின ஞானனந்த சுவாமிகளின் முழுவிலாஸமும் அவருடைய பரம்பரையும் தெரிந்துகொள்ள யாமும், எமது சிஷ்யர்களும், எமது அன்பர்களும் பிரியப்படுகிறோம். ஆதலால் உடனே "குடியரசு" தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

மேலும் ஷை வியாசத்தை யாம் எழுதியதாக நினைத்து எம்மை நேரிற் கேட்ட அன்பர்களும் மற்றுமுள்ள அன்பர்களும் யாமென நினைத்ததை மாற்றி யாமல்லவென்றும், அது எமக்கு நேர்விரோத வியாசமென்றும் தெரிந்து கொள்ளவேண்டுமோம்.

நீலகிரி—ஞானனந்த சுவாமிகள்,
திருச்சினாப்பள்ளி.

## பார்ப்பனரல்லாத இளைஞர் முதல் மகாநாடு.

### தள்ளிவைக்கப் பட்டது.

நமது மாபெருந்தலைவர் வைக்கம் வீரர் ஈ. வெ. ராமசாமி நாய்க்கரவர்கள், பி. டி. ராஜன் அவர்கள் ஆகிய இருவரின் அசௌகர்யத்தை முன்னிட்டு, ஷை மகாநாடு 19, 20௳ களில் நடத்துவதாக இருந்ததை விடுத்து, நாளிது மே ௴ 26, 27 தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எஸ். இராமச்சந்திரன் சேர்வை,
வரவேற்புக்கழகத்தலைவர்.

## தமிழ் மணவினை.

(ஸ்ரீ ரங்கநாதர் எழுதியது.)

அன்று அப்பன் புரிந்தான்; இன்று யான் புரிவல் எனக் காரணம் உணராது மூடக் கொள்கைகள் பலவற்றைத் தம் கூடத் தொகுத்து நிற்கும், சுதந்திரமற்ற நமது இந்திய மாந்தர், அருந்தி மன்னைத்திற்குப் பெருந்துயருற்றபோதும் வழக்க அனுஷ்டானத்தைத் துறக்க முயல்கின்றாரல்லர். இந்திய நாட்டிற் பிறந்த குழந்தை ஆணேயாகுக அன்றி பெண்ணே யாகுக, தோன்றிய நாளிலிருந்து நீங்கிடும் நாள்வரை கணக்கற்ற சடங்குகளின் பிணக்கிற் குள்ளாகி நின்று தரித்திரமே இல்லிற் குடி கொண்டபோதும் பாழ்படுத்துவேன் எனக் கங்கணங் கட்டுவது இயற்கையாக இருக்கிறது. சிசு ஒன்று பிறந்தால் அது பிறந்த விழா முதல் நாமஞ் சூட்டுவது, காது துளைப்பது, பள்ளியிற் சேர்ப்பது, பக்குவமாதல், நிச்சயதாம்பூலம் செய்தல், முகூர்த்தக்கால் நடுதல், விவாஹம் புரிதல், மறு குழந்தை பெறுதல், வியாதி, மரணம், கல்கரைப்பு, பதினாறுதிதிகள் இத்தகைய கணக்கிலடங்காக்கிரிகைகளைக் கையாண்டுவருகிறோம்.

இவற்றுள் ஈண்டு கையாளப்பட்டது மணவினை. ஆனமைபற்றி தற்கால சைவ வைணவக் குடும்பங்களில் நடந்துவரும் விவாஹச் சடங்குகளையும் அவை நிற்க வேண்டிய உத்தம நிலையையும் இங்கு வரைவாம்.

இந்திய நாட்டு மங்கையர் தமக்குப் பொருந்திய கல்விபயின்று, வீரந்தம்பி, தத்தங்கணவர்க்கனுகூலந் தந்து நின்றது ஓர்காலம். "செய்யொழுகுவேல்தாதை வேறொருவருக்கேயளிக்கின், வெய்யதழலே புகுந்து வீழ்த்திடுவே னென்னுயிரை" என மனவைராக்கியங்கொண்டு, உத்தமவாக்கியங் கூறிநின்றது ஓர் காலம். தற்கால நங்கையரோ தமக்கேற்ற கல்வி பெற்றிலாத் தம் உடம்பைப் பேணக் கற்றிலர். தாம் பிறந்தநோக்கம் என்ன; தமது கடமையாது என்பதை அறிந்திலர். விவாஹம் என்பது யாது; அதன் பின் தாம் நடக்கவேண்டிய தெவண்; எவ்வாறுனை மணப்பது எனத் தெரிந்திலர். இந்நிலையுற்ற மங்கையர் அவர் தம் மூடப் பெற்றோர் வைத்த இடத்தில் பல்லக்குப்பதுமை போல் இருப்பதும், பெருமாள் கோயில் மாடுபோன்று கூறியதைக் கேட்டுத் தலையசைக்கவுமே கற்றுளார். மணவினை தினத்தன்று முதியார் சொற்பிரகாரம் மதியார்தம் மண்டையை விட்டு விலகிக் கொள்ள விதியார் வலியால் மணமண்டபம் வந்து கணவன் தன்னைத் தன் கண்ணைப் பாவிப்பவன் என்னும் கருத்தும் களிப்புமன்றி பிணத்தோற்றத்துடன் அமர்கின்றனர்.

மணமண்டபங்களைப் பார்வையிடுவோமாயின், ஆங்கு பணமிட்டு நூல் சுற்றிய செப்புப்பாத்திரங்கள், மாவின் இலை, ஆவின் நெய், தெர்ப்பைப் புல் முதலிய பல மங்கல வஸ்துக்கள் காணப்படுகின்றன. பூரியர் முதல் சீரியர்வரை நாரியர் ஜென்மமெடுத்த ஒவ்வொரு பேரியலாட்கும் குங்குமம், மஞ்சள், சந்தனம், புஷ்பம், கனி, வெள்ளிலை முதலிய மங்கல வஸ்துக்களைக் கண்ட மாத்திரத்து மோகம் ஜெனிக்கின்றது. உயரிய ஆடவர் பெரும்பாலும் இத்தகைய வஸ்துக்களால் கவரப்படுதலில்லை யென்பது அநுபவ வாயிலாய்க் கண்ணுறும் காட்சி. தமிழ் மக்கள் முன்னர் கூறிய வஸ்துக்கள் தமது உடலுக்கு வாசனை அலங்காரம் ஊட்டுவதால் மங்கல வஸ்துக்களாகக்கருதி வந்தனர். இவற்றைத் தம் சுற்றத்தாருக்கு நற்குறி, சமாதான அடையாளமாக அனுப்பிவந்தனர். நல்வஸ்துக்களின் காட்சியாக சமாதானமே யென்றும் நிலவுக. மேற்கண்ட வஸ்துக்கள் அனுபோகத்தில் தக்க பலன் தந்து ஆகத்தைச் சிறப்பிக்கின்றன. இந்நல் வஸ்துக்கள் நிரம்பிய இவ்விடத்தில் தெர்ப்பைப்புல் செய்கின்ற ஜோலியென்ன? இது தரும் பிரயோஜன மெது? சந்திரமதியின் மகன் பிடுங்கச் சென்ற புல் என அவ்விந்தியத்தாயைச் சிந்தனைசெய்யவோ? தாயே! உன்பிள்ளை பிழைக்கட்டும்; நீடூழிவாழட்டும். புல்லும் புற்றரவும் நமக்கு வேண்டாம்.

மணமக்கள் கிழக்கு நோக்கிய முகமாயிருக்க மணவினைத் தேசிகராகப் பெரும்பாலும் பெயரில் பிராமணரான ஒருவர் எதிரமர்கின்றார். பெயரில் பிராமணரான அவர் உண்மையில் பிறமணர் ஆவர். அதாவது பிராமணருக்குரிய நெறிதவறி சர்க்கார் உத்தியோகம், தரகு, வியாபாரம், சாப்பாட்டு விடுதி முதலிய பிறமணமுள்ளவர். தமிழ் மண மக்கள் முன்னர் பேதைப் பிறமணன் தான் ஏதோ கற்றிருப்பதாகக் காட்டப் பல்வேறு பிதற்றிச் சடங்கை நிறைவேற்றி எஃது எவ்வாறாயினும் தன் பொன் வரும் படியில் கருத்தாக அங்குள்ளார் அபிப்பிராயங்களுக்கெல்லாம் நட்டுவங் கொட்டிக் கெட்டிக் காரனுகப் பணத்தையும் பொருளையும் கொண்டு வஞ்சித்தோமென நெஞ்சிலுவந்து செல்கின்றான். தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ்ப்பாலுண்டு, தமிழ்ச் சோறு தின்று, தமிழ்ப்பா படிக்கும் தமிழ் மக்கட்கு ஆரியக்கூற்று எற்றுக்கு? அக்கூற்றில் எப்பாகம் இவர் கருத்திற் படிந்திற்று? எது அறிந்தனர்? எவ்வண்ணம் இனி ஒழுகுவர்? சடங்கு வைபவங்களுக்கு நம்மில் அறிந்தசான்றோர் ஒருவரை ஆசாரியராகக் கொண்டாலென்ன? இருள் உலக வாழ்க்கை இன்னும் விருத்தியடைதல் முறைமையா? இவ்விருள் நீங்குவது என்று? எவ்வண்ணம்? இவ்விருளால் வந்த கேடு யாருக்கு? தனக்கு, தன் தாரத்திற்கு, தன் தந்தையாருக்கு, தன் தாய்ப் பாவைக்கு, தன் தாய்நாட்டிற்குமே. தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொரு தேகமும் இத்தனை பேருக்கு அவமானம் உண்டுபண்ணுவேனெப் பிறப்பிலேயே துவஜங் கட்டி வந்ததோ? அன்று அன்று. வழக்கம் என்ற பீடை பழக்கி வைத்ததொன்றும் இஃது.

நிற்க, தமிழ் மக்கள் இனிச் செய்ய வேண்டிய கடமையாது? தாம் செய்யும் கிரியைகள் ஒவ்வொன்றும் யாது கருத்துடன் கூடியது என ஆலோசிக்க வேண்டியதே. கருத்துடைக் கொள்கையைக் கைக் கொண்டு கருத்திலாக்கிரியையைப் புறத்தே யெறித்திடுக. விவாஹ வீட்டின் பிரதான காரியம் மங்கலப் பொன்னணைப் பூட்டுவதன்றோ? இக்கொடி யெதற்கென யோசிப்பார் வெகு சிலரே. மணமகனின் அடையாளம் மகட்குத் தோன்றவும், மணமகன் அதைக் கண்டு தொட்டுச் சதா மகிழ்ச்சி பெறவும், பின்னும் அவ்வால வயதில் அப் பெண்ணைக் கன்னிகையென வெண்ணிப் பிறபெண்கள் தம் இல்லிற்குப் பெண்ணுக எடுக்களெண்ணுத வண்ணம் தடுக்கவும், அவளைப் பார்வை யிட்டுப் பாரியாக்கக் கோரி வரும் ஆடவர்க்கு அவள் பிறபங்கில் உள்ளாளெனக் காட்டவும் இம்மாங்கல்யம் இலக்காகி நிற்கின்றது. இத்தகைய இலக்கியங்களைத் தாமுங் கொண்டவர் எனக்காட்ட ஆடவர் யாது பூண்டனர்? பெண் ஜன்மத்தைப் புண்படுத்தி அடிமைகளாக்கித் தம் மீது எது பாரமும் இல்லாது நின்று ஒன்றுக்கு ஒன்பது கன்னிகைகளை மணக்கும் முரட்டுமனிதர் மெல்லியர்கள் போன்று விரதம் பூண்டாலன்றோ நியாயமுதிக்கும்; அன்பு ததும்பும்; ஆசை மிளிரும்? இருதிறத்தாருக்கும் பொருத்தமாக, உயரிய கருத்துடையதாக, உலகம் ஒப்புவதாக நமது மணம் நன்கு நடைபெறுவதாகுக.

மணமகளை மண்டபத்துள் அழைத்து ஆசனத்தமர்த்தி அவளின் தந்தையார் தம் புத்திரியை நோக்கி "எனது புத்திரியாகிய நின்னை நான் என்னால் இயன்றளவு நினக்கு வேண்டிய சகலமும் முழுதிருப்தியுடன் அளித்து வளர்த்துள்ளேன். தற்போதும் நின் பிரிய காதலனையே மணக்க இசைந்துள்ளேன் என்னும் அடையாளமாக இம்மணமாலையைப் பெற்று நின் காதலர்க்கணிக" எனக் கொடுக்கவும், தாய் மாமனுமிருப்பின் அவரும் "கன்னி! நீ கோரிய யுவனை மணப்பதற்கு யானும் இசைந்துளேன். அதன் அடையாளமாக நான் தரும் இவ்வாரத்தைப் பெற்று நின் கருத்தின் காதலர்க்குச் சூட்டுக" என அளித்து விபூதி குங்குமத்தால் வாழ்த்தி ஆசீர்வதித்துச் செல்லவும், அவ்வளின் தாயத்தாரும் விபூதியால் வாழ்த்துக் காட்டவும் செய்கின்றனர். மணமகள் வணக்கத்துடன் இருமாலைகளையும் ஏந்திய கையினளாய் "பஞ்சபூதங்கள், கதிரவன், உள்ளொளி எனும் தெய்வப் பிரதி தோற்ற சான்றாகவும், மங்கலப்பொருட்கள் சான்றாகவும், சாத்திர வளர்ச்சியின் அடிசில், கனி,காய், ஆவின் பொருள் சான்றாகவும், எனக்காதரவாகும் இருமுது குரவர், உற்றார், சுற்றத்தார், முதியார், ஆன்றோர், அடியார்கள் சான்றாகவும் என் கையாரம் பெறும் இம்மன்னவரே எனது கணவரென மாலை சூட்டுகிறேன்" என மொழிந்து மண்டபம் சுற்றிவந்து மணமகன் கழுத்தில் மாலையிடல் ஒப்பத்தக்கது. இஃதே மணமகள் முழுச் சுதந்திரத்துடன் தனக்குரிய நாயகனைத் தெரிந்தெடுத்தாள் என்பதற் கிலக்கியமாக நிற்கும். இம்மாலைகளுடன் பூணூல் சேர்ந்திருப்பின் அந்நூலே மணமகனுக்கு மங்கல நாணுகவும் நின்றுலவும். இந்நூலணி வழக்கம் ஆடவனொருவன் மணம் பெற்றவனோ அற்றவனோ வென அறிய ஆஸ்பதமாகிறது. பின்னர் மணமகன் தான் கொடுவந்த துணிமணிகளைப் பெண்ணின் உடையாக அனுப்பி மண்டபம் வந்து உட்கார, அவரது மாமனார்வந்து "நீவிர் நுமது கருத்திற் கிசைந்த மகளை மணம் புரிய நான் மனப்பூர்வமாக இசைந்தேன்" என மணமகனுக்கு சந்தனம் முதலியனசாற்றி மாலையிட்டு ஆசீர் வதித்து அகலுகின்றனர். பின்னர் மணப்பெண் வந்துட்கார ஆன்றோர் குழுவின் ஆசீர்வாதம் ஏந்திய திருமாங்கல்யத்தை யெடுத்து, மணமகன் மாலையிடும்போது கூறும் மேற்சொன்ன சான்றுகள் வைத்து "நீவிரே யான்; யானே நீவிர் என நும்மில் இரண்டறக்கலந்து நிற்பல் என்பதற்கு இதுவே திருவடையாளம்" என மாங்கல்யம் பூட்டுகின்றார். மணமகளின் தகப்பனார் மகளின் கையை மணமகன் கையில் ஒப்புவித்து "இப்பெண் இனி நுமதடைக்கலம்" என ஆசி கூறி அகல்கிறார். மணமகன் பெற்றார் "நுமது வரவால் எமது குடும்பம் மங்களமாகுக. நன் மணமக்கள் என் மனமக்களாகுக. என்றும் இன்பம் நிலவுக" என இருவருக்கும் மும்முறை வெண்ணீறிட்டு ஆசி கூறுகிறார். பின்னர் அவரின் தாயாதிகள் ஆசி கூறுகின்றனர். வாழ்த்துப் பெற்ற மணமக்கள் கோத்த கையினராய் யாவரும் கண்டு களிக்க மண மண்டபத்தை மும்முறை சுற்றித் தமது இல்லுள் புகுகின்றனர்.

மணமகன் மணமகள் பெற்றோர் மாமன்மார் ஆசி கூறுமிடத்து நாவசதியின் நிமித்தம் ஆங்கு அமர் தேசிகர் சொல்ல இவர்கள் பின்கூறி கிரியையை நடத்தல் முறை.

இத்தகைய ஓர் விவாஹ முறை காரணத்துடன் கூடிய காரியமாகவும், நன்கு ஒப்பக்கூடியதாகவும் விளங்குகின்றமையின் நம் தமிழ்மக்கள் இனி தமது கடமையை இங்ஙனமாற்றுவராக. அணியும் நூலுக்கும் ஆடக மாங்கல்யத்திற்கும் பழந்தமிழ் முறைக்கும் மகளிர் சுதந்திரத்திற்கும் அன்பின் விளக்கத்திற்கும் இஃதே சாலச் சிறந்ததாம். ஓம் தத் சத்.

## புதுக்குடி லாட்டரிச் சீட்டு.

திருநெல்வேலி ஜில்லா அம்மன்புரம் போஸ்ட் புதுக்குடி, அருஞ்சுனைகாத்த ஐயனார்உற்சவ க்ஷேமநிதித் தர்மப்பண்டு லாட்டரிச்சீட்டு பிரைஸ் நாளிது ஷை மாசி ௴ 11௳ எடுக்க வேண்டுமென்றிருந்தது சீட்டுகள் சரிவர விற்பனையாகாததால் வரும் ஆனி ௴ 7 ௳க்கு ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனக் காரியதரிசியும், மானேஜருமான ஸ்ரீமான் அ. துரைச்சாமி நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்ரா வெளியை மனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

நாடார்குலமித்திரன்
விபவ ௵ வைகாசி ௴ அ ௳

## எதிர்பார்க்கின்றோம்.

நமது நாடார் மகாஜன சங்கம்கான்பரன்ஸ்கள் செய்த திர்மானங்கள்பல இன்னும் அனுஷ்டானத்திற்குக்கொண்டுவரப் படாம லிருக் கின்றன. நமது சமூக சீர்திருத்த விஷயமாக நியமித்த சில கமிட்டிகளும் அதனதன் வேலைகளைச் செய்யாம லிருக்கின்றன. ஏழை மாணவர் சகாயநிதியை விருத்தி பண்ணுவதற்குக் கட்டடங்கள் வாங்க வேண்டு மென்றிருக்கும் கமிட்டி, ஒரு வேலையும் செய்ததாகத் தெரியவில்லை. ஏழை மாணவர்கள் தொகையோ வர வர அதிகப்படுகிறது. சங்கத்திலிருந்து பணச் சகாயம் செய்கின்றார்களென்று தெரிந்த நாள் முதல் எப்படியும் பணச்சகாயம் பெறலாமென்று பல மாணவர்கள் படிப்பில் மிக ஆசைகொண்டு படித்து வருகிறார்களென்று கேள்விப் படுகின்றோம். எல்லா மாணவர்களுடைய ஆசைகளையும் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பண்டு கைவசமில்லை யாயினும் இருக்கிற பண்டையாவது அபிவிருத்திசெய்ய முடியாமலிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், நமது சமூகத் தலைவர்களுக்குள்ளே சிற்சில அபிப்பிராய பேதங்களிருந்து கொண்டு அவர்கள் சங்கம் நடவடிக்கைகளில் அதிகம் கலந்து கொள்ளாதிருப்பதி னுலென்று தெரிய வருகிறது. சங்கத்தின் நிர்வாகிகள் சமூக அபிவிருத்தியில் எவ்வளவு அக்கரை காட்டி வந்தபோதிலும் போதுமான தலைவர்களின் அதிக ஒத்துழைப்பில்லாததினுல் வேலைகள் வெகு துரிதமாய் நடைபெறவில்லை யென்று சொல்லப்படுகிறது. ஆகையால் அருப்புக்கோட்டையில் நடக்கும் 12—வது கான்பரன்ஸில் எல்லாத் தலைவர்களும் வந்திருந்து சமூக சீர்திருத்த வேலைகள் மீண்டும் துரிதமாய் நடைபெறுவதற்கு வேண்டிய திட்டங்கள் ஏற்படுத்துவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

மறுமுறையும் ராயல் கமிஷன் இந்தியாவுக்கு வருமுன் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி இப்போதே ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதிருக்கிறபடியாலும், இதைப் பற்றியே நமக்குப் பல விதமான அபிப்பிராயங்களைப் பலர் தெரிவித்துக் கொண்டிருப்பதாலும் எல்லாவித அபிப்பிராயமுடையவர்களும் கான்பரன்ஸுக்கு விஜயம் செய்து ஒரு முடிவுக்கு வருவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

## நாடார் 12-வது மகாநாடு.

### கனம். மந்திரி—டாக்டர். சுப்பராயன் மகாநாட்டைத் திறந்துவைப்பார்.

உபசரணைக் கமிட்டிச் சேர்மன் ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பரநாடாரவர்களும், பொக்கிஷதார் ஸ்ரீமான் வள்ளிநாயக நாடாரவர்களும், பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடாரவர்களுடன் உதகமண்டலம் சென்று கனம். மந்திரி—டாக்டர். சுப்பராயனவர்களை, மகாநாட்டைத் திறந்து வைக்கும் விஷயமாய்ப் பேட்டி கண்டு பேசியதில், கனம். மந்திரியவர்கள் ஜூலை ௴ 4 உயில் மகாநாட்டைத் திறந்து வைக்க மனமுவந்து விட்டதாக உபசரணைக் கமிட்டிச் சேர்மனிடமிருந்து உபசரணைக் கமிட்டிக்குத் தந்தி கிடைத்திருக்கிறது.

ஃ ஃ

### கால் பந்தாட்டப் போட்டி.

### விபரங்களும், விதிகளும்.

கக்ஷி ஒன்றுக்கு நபர்கள் 11. பிரவேசக் கட்டணம் ரூபாய் 3—0—0. டோர்னமெண்ட்டில் 7டீம்களுக்கு மேல் கலந்திருந்தால் முடிவில் ஜெயித்தவர்களுக்கு 11 தங்க கில்ட் மெடல்களும், தோற்றவர்களுக்கு 11 வெள்ளி மெடல்களும் பரிசு கொடுக்கப்படும். 7 டீம்களுக்குக் குறைந்தால் 11 வெள்ளி மெடல்கள் நிறுத்தப்படும். இந்த டோர்னமெண்ட்டை டிக்கட் அன்னியில் எல்லோரும் வந்து பார்க்கும்படியாய் ஏற்பாடு செய்திருப்பதால், அந்தந்த டீம்களின் சகல விதச் செலவுகளையும் அவரவர்களே பொறுத்துக் கொள்ள வேண்டியது. இந்த டோர்னமெண்ட்டை நடத்தி வைக்க ஒன்பது பேர்களடங்கிய கமிட்டி யொன்று நியமனமாகி யிருக்கிறது.

### விதிகள்.

1. இந்த டோர்னமெண்ட் நாடார் வாலிபர்கள் அடங்கிய டீம்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

2. விண்ணப்பங்களும், பிரவேசக் கட்டணமும் வைகாசி ௴ 17 உ (31—5-28) க்குள் காரியதரிசிகளிடம் சேர வேண்டும். 5-6-28-ல் விஷய சூசிகை அனுப்பப்படும்.

3. ஒவ்வொரு விண்ணப்பத்திலும் 3 மாற்றுட்கள் (சப்ஸ்டிட்யூட்ஸ்) சேர்த்து அனுப்ப வேண்டும். ஜாபிதாவில் பெயர் இல்லாதவர்கள் போட்டியில் விளையாட முடியாது.

4. ஒவ்வொரு டீமும், எத்தனை டீம் பிரிவுகளையும் அனுப்பலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும், ஏற்பட்ட பிரவேசக் கட்டணம் சேர்த்து அனுப்ப வேண்டும். அனுப்பிய ரூபாய் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

5. டோர்ன மெண்ட் கமிட்டிக்கும், காரியதரிசிகளுக்கும் தேவையானல் விளையாட்டை சமயோசிதம்போல் நடத்த அதிகாரமுண்டு.

6. எல்லா விளையாட்டுக்காரர்களும் தங்கள் கக்ஷிகளுக்குரிய அடையாளச் சட்டைகளோடு விளையாட வேண்டும்.

மேற் கண்ட விதிகளின்படி போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர்கள் வேறு விபரம் தெரிந்து கொள்ள வேண்டுமானல் காரியதரிசிகளுக்கு எழுதிக் கொள்ளலாம்.

ஜி. ஏ. தர்மதுரை,
என். நடராஜபாண்டியன்,
காரியதரிசிகள்,
கால் பந்தாட்ட டோர்னமெண்ட் கமிட்டி, அருப்புக்கோட்டை.

## அரிய வுரைகள்.

சாப்பிடுவதில் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். பசித்திருக்கக் கூடாதென்றாலும் அஜீரணம் செய்துகொள்ளக் கூடாது.

—மகாத்மாகாந்தி.

ஃ ஃ

இயற்கை கரடுமுரடானது. நாகரீகப் பட்டாடையின் இழைகளோ மிக மெல்லியவை. இரண்டுக்கும் பொருந்துமா ?

—ஷையார்.

ஃ ஃ

ஐரோப்பாவில் ஆகாய விமானங்களினுல் தூரம் என்பதே இல்லாமல் செய்துவிட்டார்கள். இதனுல் அவர்கள் வாழ்க்கை இன்பம் அதிகமாயிற்றா? ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் போடப்பட்டன. அவ்வளவுதான். வாழ்க்கை இன்பத்துக்கு வேகமான பிரயாணத்தைக் காட்டிலும் முக்கியமானவை எவ்வளவோ இருக்கின்றன.

—ஷையார்.

ஃ ஃ

ஒவ்வொருவனும் தன் அறிவுக் கெட்டிய அளவில் சத்தியத்தைக் காண்கிறான். சத்தியம் எவனொருவனிடமும் பரிபூரண மடைந்திருக்கவில்லை. "நானே சத்தியம்" என்று சொல்பவன் அகம் பாவம் பிடித்தவனுவான். ஒரு மதம் ஒருவருக்குச் சரியாயிருக்கிறது; மற்றொன்று எனக்குப் பொருத்தமாயிருக்கிறது. வெவ்வேறு இயல்புள்ளவர்கள் சத்தியத்தைத் தேடிச்சென்ற வழிகளையொட்டி அவை யேற்பட்டிருக்கின்றன. இரண்டில் எதுவும் முற்றும் சரியானது என்று சொல்லமுடியாது. அவரவர்கள் தம் தம் ஆற்றலின் அளவுக்குத் தக்கபடி திருப்தியடைவார்கள்.

—ஷையார்.

ஃ ஃ

ஏகாதி பத்தியத்தை எதிர்ப்பவர்கள் முதலாளி முறையையும் எதிர்த்தே யாக வேண்டும்.

—ஸ்ரீ பண்டித ஜவாரிலால் நேரு.

ஃ ஃ

ஆண் மக்களை உண்டு பண்ணுகிறவர்கள் ஸ்திரீகளே யாவர். அடிமையிலாழ்ந்து ஒவ்வொன்றுக்கும் பிறரை எதிர் பார்த்து வாழும் பெண்கள் சிறந்த ஆண் மக்களை உண்டு பண்ண முடியாது.

—ஸ்ரீ லாலா லஜபதிராய்.

ஃ ஃ

என்னுடைய இந்து மதம் சில வித்வான்கள் கொண்டிருக்கும் இந்து மதம் அன்று. நான் நம்பும் இந்து மதம் ஆண்மை யுள்ளது; எளிமை பொருந்தியது; ஸ்திரீகள் புருஷர்கள் எனும் வேற்றுமை பாராட்டாதது; மனிதர் யாவரும் சமமானவர் என்று பறை யறை விப்பது.

—ஷையார்.

ஃ ஃ

மிஸ்.மேயோ எழுதிய புத்தகத்திற்கு ஆதாரங்கள் அதிகமாய்த் தந்திருப்பது சென்னையே என்பதைக் குறிப்பிடுவதற்காக என்னை மன்னியுங்கள். அவள் காட்டியுள்ள குற்றங்களில் அனேகம் சென்னையைப் பொறுத்தவரையில் தான் ஓரளவு உண்மையாயிருக்கின்றன. தீண்டாமையின் கொடுமை இந்த மாகாணத்தில்போல் வேறெந்த மாகாணத்திலுமில்லை. இங்குள்ள தேவதாசி முறையைப் போன்றது. பிற மாகாணங்களில் கிடையாது. இத் தீமையை நீக்கு மாறு உங்களைப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

—ஷையார்.

ஃ ஃ

அந்நிய ஆட்சியின் கீழ் அமைதியாயிருப்பதை விட வகுப்புப் போரில் உயிர் விடுவது சிறந்ததாகும்.

—ஸ்ரீ டாக்டர். சத்திய பாலர்.

ஃ ஃ

தன் காரியத்தை மறந்து பிறருக்கு நன்மை செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயுள்ள சுய லாப திருஷ்டியில்லாதவன் சாதாரண மனிதனுயிருந்தாலும் உற்சாக முள்ளவனுகவே யிருப்பான்.

—ஸ்ரீமதி அன்னி பெஸன்ட்.

ஃ ஃ

## நன்கொடைகள்.

கோயம்புத்தூர்ஜில்லா புஞ்சைப் புளியம்பட்டியில் பெரும் தனவந்தராய் வசித்து வருபவரும், நம்குல நலங் கோரியுழைப்பவரும், நம்மித்திராபிமானியுமான ஸ்ரீமான் க. கோபால்சாமி செட்டியாரவர்கள் நாளிது வைகாசி௴ 11உ நடக்கவிருக்கும் தமது புதுமனை புகுதலும், தமது செல்வக்குமாரத்தி சௌபாக்கியவதி நாச்சியார் எனும் குழந்தைக்கு கர்ன பூஷணம் செய்தலுமாகிய இரு சுபகாரியங்களை முன்னிட்டு, நம்மித்திரன் பாலன்பு கூர்ந்து நன்கொடையாக அனுப்பியுள்ள ரூ. 2—0—0ஐச் சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

ஃ ஃ

விருதுநகர் பிரபல பஞ்சு வியாபாரியும், கமிஷன் ஏஜெண்டும், நம் குலாபிமானியுமான ஸ்ரீமான் ப. அ. ஐய்யம்பெருமாள் நாடாரவர்கள், தமது சிரேஷ்ட புத்திரர் திருவாளர் ராமசந்திர பாண்டிய ரவர்களுக்கும், ஷையூர் பிரபல வியாபாரி ஸ்ரீமான் தொ. ம. மு. மதனை நாடாரவர்கள் கனிஷ்ட குமாரத்தி சௌபாக்கியவதி ராஜம்மாளுக்கும் நாளிது வைகாசி௴ 10உ நடைபெறவிருக்கும் விவாக சுபகாரியத்தை முன்னிட்டு நம்மித்திரன் பாலன்புகூர்ந்தனுப்பிவைத்த ரூ 1-0-0 ஐச் சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

## கோயம்புத்தூரில் சட்ட மெம்பர்.

### கைதியைப் போல் செக்கில் எண்ணெய் ஆட்டினர்.

கனம். சட்டமெம்பர் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் கோவைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தபோது நிகழ்ந்த அபூர்வ சம்பவம் என்றும் மறக்கத் தக்கதன்று. சட்டமெம்பர் சிறைச்சாலையைச் சுற்றிப் பார்க்கும் போது அவருடன் சென்றிருந்தவர்கள் மேனுட்டைப் போல இங்கும் கடன் காரர்களைச் சிறைப்படுத்தும் முறையை எடுத்துவிடச் செய்ய வேண்டுமென்று யோசனை கூறிய போது, கனம். கிருஷ்ணன் நாயர் அதனைக்குறித்து நன் காலோசித்துத் தான் செய்வதாகக் கூறினர். பிறகு கனம். சட்ட மெம்பர் சிறைச்சாலைக் கைதிகளில் சிலர் செக்கில் எண்ணெயாட்டுவதைச் சென்று பார்வையிட்டார். விடுபட்ட கைதிகளின் உதவிச் சங்கக் காரியதரிசி அத்தகைய வேலையில் கைதிகள் படும் பெருங் கஷ்டத்தை எடுத்துக்காட்டி அதன் சம்பந்தமாக ஏதாவது சீர் திருத்தம் செய்து கைதிகளின் கஷ்டத்தைக் குறைக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டார். இதன்மேல் கைதிகளின் கஷ்டத்தைத் தாம் அனுபவ பூர்வமாக அறிந்துகொள்வதன் பொருட்டு கனம். சட்ட மெம்பர் கைதிகளுக்குப் பதிலாகத் தாமே செக்கை ஆட்டிப்பார்க்கச் சென்றார். அவருடன் சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல், போலீஸ் சூப்பரின்டென்டென்ட் முதலிய உத்தியோகஸ்தர்களும் மற்றும் சிலரும் செக்கை ஆட்டுவதில் உதவி புரிந்து அனைவருமாக அக்கஷ்டத்தை அறிந்துகொண்டனர். கனம். சட்ட மெம்பரின் அறிவாற்றலையும், தயாளத்தையும் அனைவரும் கண்டானந்தித்துப் புகழ்ந்தனர்.

மந்திரிகள் கால்களிலும், கைகளிலும் தளையிடப்பட்டு ஒரு புறத்தில் இலாகா தலைவர்கள், காரியதரிசிகளாலும், மற்றொரு புறத்தில் கவர்னராலும் கைதியைப் போல் நடத்தப்பட்டு வருகிறார்கள். சீர்திருத்த அமைப் பின் கீழ் மந்திரிகளின் நிலை இது தான்.

—மாஜி மந்திரி ஸ்ரீ ஆரோக்கியசாமி முதலியார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## கல்வியே அரசியல் உரிமை தரும்.

குடியரசு தத்துவ உணர்ச்சியும், சமத்துவ, சுதந்திரக் கிளர்ச்சியும் நிலவும் எல்லா தேசங்களிலும் கல்வியே பெரும்பாலும் ஆட்சிக்கும் அதிகார வர்க்கத்துக்கும் போதிய துணைபுரிந்து வருகிறது. கல்வியில் முன்னேறின சமூகங்களையும், அவைகளுக்கு அரசாங்கத்திலிருக்கும் செல்வாக்கையும் அதிகாரங்களையும் நாம் பார்த்து வருகிறோம். அரசாங்கத்தில் குடிகளுக்குப் பங்குண்டென்ற உணர்ச்சி மிகுந்த இந்நாளில் பற்பல ஜாதியார்களும் தங்களுக்குச் செல்ல வேண்டும் உரிமைகளுக்காக அரசாங்கத்தோடு பலமாய் வாதாடுகின்றார்கள். இக்காலத்தில் நாடார் சமூகம் தூங்கிக்கொண்டிருந்தால் எதிர்கால அரசாங்கத்தில் நமக்கு அதிகார மிருக்குமா வென்பதை நாடார் பெருமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளலாம். நமது குலத்துக்கு உரிமையுள்ள அரசாங்கப் பதவிகளை மறந்து வானாவிருந்துவிட்டால் தெய்வாதீனமாய் ஆங்கிலேய அரசாங்கம் மாறிய காலத்தில் கல்வியில் முன்னேறின பார்ப்பனர்கள் மிதியாலோ அல்லது வேறு ஏதேனுமொரு ஜாதியாரின் மிதியாலோ நாம் நசுக்குப்பட்டுப் போவோம்.

மேற்கூறிய ராஜீய தத்துவம் எத்தனை உண்மையென்பதை யறிவான் வேண்டி திருவிதாங்கூர் ஆட்சிமுறைகளைப்பற்றிச் சற்று கவனிப்போம். அந்த நாட்டில் பிராமண சமூகமே கல்வியில் முன்னணியில் நின்று கொண்டிருந்தது. எல்லா இலாகாக்களிலும் அவர்களே நிறைந்திருந்தார்கள். திருவிதாங்கூர் நாடு அவர்கள் ஆட்டுகைக்குள்ளாயிருந்தது. பிரிட்டிஷ் இந்தியா, மைசூர் முதலிய வெளிநாடுகளினின்றும் பார்ப்பனர்கள் திரள் திரளாய்த் திருவிதாங்கூருக்குள் வந்து குழுமி, எல்லாசர்க்கார் இலாகாக்களிலும் இடம் பெற்றுக் கொண்டு, துரைத் தனத்தையும் குத்தகை பிடித்துத் தாங்களே அரசாங்கமென்ற நிலையில் பிராமணரல்லாதார்களைக் கீழ் ஆழ்த்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். எல்லா சக்திகளுக்கும் எதிர் சக்திகளுண்டென்னும் உண்மைக்கேற்ப பிராமண சக்திக்கும் எதிர் சக்தி இப்போது ஆரம்பித்துவிட்டது. இப்போது அவர் அதிகாரம் நாளடைவில் குறைந்து கொண்டே வருகிறது. பிராமணரல்லாதார் கல்வியில் முன்னேற்றமடைந்து சர்க்காரில் கூடுதல் இடம் பெற்று வருகிறார்கள்.

பிராமண வர்க்கத்தைத் தவிர்த்தால் தற்காலம் கல்வியில் மிகவும் முன்னேறி நிற்பது சூரியானி கிறிஸ்தவர்களே. திருவிதாங்கூர் இந்தியாவைச் சேர்ந்த இதர நாடுகளைக் கல்விப் போட்டியில் ஜயித்துவிட்டது. சூரியானி கிறிஸ்தவர்கள் தங்கள் முன்னேற்றத்திற்காக எடுத்துக்கொண்ட அரும் பெரு முயற்சியின் பயனே யாகும். அரசாங்கப்பதவிகளை ஏற்றுக் கொள்வதுதான் முன்னேற்றமென்ற எண்ணங்கொண்டு சர்க்கார் இலாகாக்களில் நுழைந்து உயர்ந்த பதவிகளை எளிதில் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள். பெரிதுஞ் சிறிதுமான ஆயிரக்கணக்கான உத்தியோகங்களில் சூரியானி கிறிஸ்தவர்களாகவே யிருக்கிறார்கள். சுருங்கச் சொல்லுமிடத்து சூரியானி கிறிஸ்தவ சமுதாயமே திருவிதாங்கூர் அரசாங்கமென்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது.

இவையாவும் கல்வியின் சொல்லற்கரிய உபயோகத்தை விளக்கிக் காட்டவில்லையா? கல்வியில் முன்னேறின சமூகமே அரசாங்கமென்னும் உண்மை இதனால் நன்கு புலப்படவில்லையா? நாம் உயர்தரக் கல்வியில் பராமுகங்காட்டி வியாபாரத்திலும் விவசாயத்திலுமே முற்றிலும் சிக்கிக்கொண்டிருந்தால் எதிர்காலத்தில் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கும்போது நாடார் சமூகம் எச்சமூகங்களால் ஆளப்படுமென்றால், இன்று சிறந்த சமூகங்கள் கல்வித் துறையில் முன்னேற்ற மடைந்து அரசாங்க உத்தியோகங்களை உனக்கெனக் கென்று பிடுங்கிக்கொண்டிருக்கின்றனவோ அந்த சமூகங்களே யென்க. ஆகையால், ஆங்கிலக்கல்வியில் தேர்ச்சியடைந்து, நமக்குச் செல்ல வேண்டிய அரசாங்க உரிமைகளை யெல்லாம் கைப்பற்றிக்கொள்ளும் கடமை தோள் மேலிருக்கிறது என்பதை நாடார் பெருமக்கள் கவனிப்பார்களா? தங்கள் குழந்தைகளை உயர்தரக்கல்விக்கனுப்பி நாடார் குலத்தின் எதிர்கால வாழ்வுக்குத் துணைபுரிவார்களா?

ஸி. தங்கையாநாடார்,
நாடார் மகாஜன சங்கம் கௌன்ஸிலர்,
தென்திருவிதாங்கூர்.

## ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமி நாடார் அவர்கள் கவனிக்கவேண்டும்.

நாகபட்டணம், தொண்டர்படை சேனாதிபதி ஸ்ரீமான் எஸ். கே. ராமசாமிநாடாரவர்கள் 30-4-28—"நாடார் குலமித்திர"னில் "சத்தியாக்கிரகத்திற்குத் தயாராக வேண்டும்" என்னும் தலைப்புடன் எழுதி வெளியிட்டிருந்த வியாசத்தைப் பார்த்தோம். கோவில் விஷயமாய் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்பது எனக்குச் சரியாய்த் தோற்றவில்லை. நமக்குத் தொண்டர் படை வேண்டியதுதான். ஆனால் அப்படை கோயில் பிரவேசத்திற்கென்றிருக்கக்கூடாது. நாடார்கள் வசிக்கும் எந்த ஊரிலாவது நாடார்களுக்கென்று கோவில் இல்லாமலிருக்கிறதா? அப்படி இல்லாமல் இருக்கும் பட்சத்தில் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டியது நியாயந்தான். நம் பெரியார்கள் நம்மவர்களின் பத்து வீடுகள் இருக்கும் கிராமங்களில் கூட கோவில்கள் கட்டிவைத்தும், பண்டுகள் உண்டுபண்ணியு மிருக்கிறார்கள். ஆகையால் நம்மவர்க்குக் கோவில் பிரவேசம் அவசியமின்று. தொண்டர் படையின் வேலையானது நம்மவர்க்குப் பேருபகாரமாயிருக்க வேண்டும். சத்தியாக்கிரக முறையில் நமது மகாஜன சங்க ஆக்ஞைப்படி தலைக்கட்டு வரிகளைத் தீவிரமாய்ப் பிரிக்கலாம். வசூலான பணத்தைப் பல நல்வழிகளில் செலவு செய்யலாம். அப்படிச் செய்தால் என்றைக்கும் அழியாத கீர்த்தி நிலவும். நமக்கு எங்கெங்கு கஷ்டங்கள் இருக்கின்றனவோ அங்கங்கு தொண்டர்படை சென்று அவற்றைத் தீர்த்துவைக்கலாம். நாடார்மகாஜனசங்கத்தின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவந்து பயனளிக்கலாம். நம் குலப் பத்திரிகைகளுக்கு ஆதரவு தேடிக் கொடுக்கலாம். நம் பத்திரிகைகள் சக்தி குறைந்து தளர்ந்து நிற்கின்றன. இவற்றைக் கை தூக்கி விட்டாலன்றோ நம்மை நாம் பிரகாசத்தி விருத்தியவர்களாவோம்?

இம்மாதிரி பல பல நலமுள்ள காரியங்களைச் செய்துவந்தால் நம் மகாஜன சங்கத்துக்குப் பக்க பலமாக இருக்கும். இப்படிப்பட்ட காரியாதிகளை ஆழ்ந்த கருத்துடன் செய்கிறதே நம் தொண்டர் படைக்குகந்ததாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. இராமசாமி நாடார்,
கழுகுமலை.

## பால்ய நாடார் சங்கம், விருதுநகர்.

இச் சங்கத்தின் பொதுக் கூட்டமானது நாளது விபவ௵ வைகாசி ௴ 13௳ (26—5—28) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு த. ர. வாசகசாலையின் மேல் மாடியில், சங்கசாசுவதப் பிரசிடென்ட் ஸ்ரீமான் பி. சொக்கலிங்க நாடார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

அவ்வமயம் நமது சங்கத்தின் 4-வது ஆண்டு வருடப் பூர்த்தி விழாவிற்கு கௌரவ அக்கிராசனர் தேர்ந்தெடுக்க வேண்டியதிருப்பதால், பாலிய நாடார்கள் அனைவரும் தங்களின் மேலான அபிப்பிராயத்தை நேரிலேனும், கடிதத்தின் மூல மேனும் தெரிவிக்கக் கோருகிறோம்.

ப. வே. ச. பழனிச்சாமி,
ஜெனரல் செக்ரட்டேரி.

## செய்தித் திரட்டு.

லாகூர் சட்ட கலாசாலையில் படித்து வந்த மகிக்லால் கப்பூர் என்னும் மாணவன் தன் மனைவியை அவளது தகப்பனாராகிய ஓர் பெரிய பாங்கிதாரிடமிருந்து ரூ 5000-0-0 வாங்கிவரச் சொன்னதற்கு மறுத்த காரணத்தால் கத்தியைக்கொண்டு குத்திக் கொன்றுவிட்டான். இவன் கற்றதினால் ஆய பயனென்?

* *

ஐரோப்பா சென்றிருக்கும் மாஜி இந்தூர் மகாராஜாவும் அவரது அமெரிக்க மனைவி மிஸ். மில்லரும் கூடிய சீக்கிரத்தில் அமெரிக்கா செல்வார்களென்றும், அமெரிக்கா சென்றதும் அங்கு மிஸ். மில்லர் இந்துமதப் பிரசாரம் நடத்தப் போவதாகவும் தெரிய வருகிறது.

* *

இவ்வருஷம் ஏப்ரல் மாதத்தில் இங்கிலாந்தில் 96797000 பவுன்களுக்கு இறக்குமதியும், 55268000 பவுன்களுக்கு ஏற்றுமதியுமாகி யிருக்கின்றன. இத்தொகைகள் சென்றமார்ச்சு ௴ தொகைகளைவிட 13714000 பவுன்களும், 9690000 பவுன்களும்முறையே குறைவு பட்டவையாகும்.

* *

பம்பாயில் ஸோவ்ரி என்ற விடத்திலிருக்கும் ஓர் பருத்தி ஆலையில் தீவிபத்துண்டாகி 6 லட்சம் ரூபாய் நஷ்டமுண்டாகி விட்டது.

* *

தேச சுதந்திரத்தை விரும்பிய யாவரும் பார்டோலி சத்தியாகக்கிரத்தை நடத்துவதற்கு ஸ்ரீஜத் வல்லபாய் படேலின் வேண்டுகோளின்படி பண உதவி செய்ய வேண்டுமென்றும், பார்டோலி சத்தியாக்கிரகம் இந்தியா முழுமையும் சார்ந்த முக்கிய விஷயமெனவும் மகாத்மா காந்தி கூறுகிறார்.

* *

ரங்கூனிலும் அதைச் சுற்றிலும் பெரும் புயல் காற்றுண்டாகி பல சேதங்கள் விளைத்துவிட்டது. கூரைகள் அடித்துக்கொண்டு போகப்பட்டும், சில வீடுகள் விழுந்தும், பல படகுகள் கவிழ்ந்தும் போயின. 3 பேர்கள்பலத்த காயப்பட்டு ஆஸ்பத்திரியிலிருக்கிறார்கள். பலரைக்காணோம்.

* *

ஸ்ரீவான்லியர் பிளாக் என்னும் ஓர் டச்சு அமெரிக்கக் கோடீஸ்வரர் 2 தொழிலாளருடன் ஆகாய விமான மேறி கிராய்டனிலிருந்து ஆப்பிரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு ஆகாய மார்க்கமாகப் பிரயாணம் செய்யப் புறப்பட்டிருக்கிறார். இப்பிரயாணம் 40,000 மைல்களாகும். இதை அவர் சர்வ சாதாரணமாய் நினைக்கிறார்.

* *

நீலாம்பூர் பெரிய ராஜாவின் மூன்றாவது குமாரத்தி ஸ்ரீமதி ஜானகியம்மாள் தன் ஆடைகளில் மண்ணெண்ணெய்யை ஊற்றி நெருப்பிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். இந்த ராஜகுமாரிக்கு வயது 18. இன்னும் விவாகமாகவில்லை.

* *

அமிர்தசரவில் ஒரு இந்துப் பெண் பத்திரகாளியம்மன் உற்சவத்திற்குப் போய் விட்டுத் திரும்புகாலில் ஒரு மகமதிய வாலிபன் அவளைத்தாக்கி அவளது மூக்கையறுத்துவிட்டான். இது பற்றி அங்கு விசேஷ பரபரப்பேற்பட்டிருக்கிறது. எதிரி குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டிருக்கிறான்.

* *

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தலைவர் ஸ்ரீ கூலிட்ஜ் மிஸிஸிப்பி ஆற்றின் வெள்ளத்தை அணைபோட்டுத் தடுக்க 6 கோடி பவுன்கள் செலவாகுமென இஞ்ஜினியர்களால் தயாரிக்கப்பட்ட மசோதாவை அங்கீகரித்துவிட்டார். இம்முயற்சி பலிதமானால் அமெரிக்க இஞ்ஜினியர்களின் திறமையை உலகம் மிகவும் மெச்சும்.

* *

மாண்டிகமரி ஜில்லாவைச் சேர்ந்த கிராமத்தில் 15-வயதுப் பெண் ஒருவன் 6-வயதுக் குழந்தையினிடம் 7 ரூபாயைக் களவாடுவதற்காக அக்குழந்தையைக் கொன்ற குற்றத்திற்காக அவளுக்கு லாகூர் கூட்டு ஸெஷன்ஸ் ஜட்ஜ் தீவாந்திர சிக்ஷைவிதித்தார்.

* *

புத்த சந்நியாசிகளால் புத்தரின் அவதாரம் எனப் பூஜிக்கப்படும் பாவா எனும் வெள்ளையானை இங்கிலாந்து அமெரிக்கா முதலிய விடங்களுக்குப் போய்விட்டுக் கல்கத்தா வந்து சேர்ந்திருக்கிறது. இதை டாக்டர் போமின் 1819-ம் வருடத்தில் பிடித்து 1926-ம் வருஷத்தில் லண்டன் மிருகாசயத்திற்கனுப்பினர். அங்கு 7 மாதங்கள் தங்கிவிட்டுப் பின் அமெரிக்காவிற்குக் கொண்டு போகப்பட்டது.

* *

மகன்லால் காந்தி ஞாபகார்த்தமாக ஓர் கதர் கண் காக்ஷி ஏற்படுத்த வேணுமென்றும் அதற்கு 1 லக்ஷம் ரூபாய்கள் வசூல் செய்ய வேணுமென்றும் அகில இந்திய நூற்போர் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

* *

பம்பாய் மார்க்ஸ் கம்பெனியில் திருடு போன நகைகளில் 30 ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகள் வாங்கியிருப்பதாக லட்சுமி நாராயண மோதிலால் என்பவரைக் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனர்.

* *

எம். ஏ. பட்டம் பெற்று ரங்கூனில் ஆசிரியராக விருந்த ஸ்ரீமான் ராஜகோபாலன் என்பவர் காவிரியாற்றில் வாட்டர் ஓர்க்ஸிற் கருகில் மூழ்கி யிறந்து போயினர்.

* *

பர்துவான் மகாராஜா பார்லிமெண்டு மெம்பர்தேர்தலில் நிற்கப்போவதுபற்றி பல கக்ஷிக்காரர்களுக்குள்ளும் கிளர்ச்சியுண்டாகியிருக்கிறது. பிரிட்டிஷ் ராஜ்யத்தின் குடிகளிலொருவரென்ற உரிமையில் அவர் தேர்தலுக்கு நிற்பார் என்று சொல்லப்படுகிறது.

* *

லாகூரில் ஒரு ஹெட்கான்ஸ்டேபிள் தன் கோட் காலரை (சட்டையின் கழுத்துப்பட்டியை) சரியாக வைத்துக் கொள்ளாததற்கும் போலீஸ் அதிகாரியின் முன் சரியானபடி "அட்டென்ஷ"னாக நிற்காததற்கும் ஒரு உயர்தரப் போலீஸ் உத்தியோகஸ்தர் அவரை பலத்தகாயமுற அடித்து விட்டதால் உயிர் துறந்தார்.

* *

அமிர்தசரவில் மாலக் ராம்பார்தி சண்டு தொழிற்சாலையில் தீ விபத்தேற்பட்டு எண்ணெய், அரிசி, மாவு முதலியவை எரிந்து ஒரு லக்ஷ ரூபாய்க்கு நஷ்டமேற்பட்டு விட்டது. ஆனால் அச்சாலை இன்ஷ்யூர் செய்யப்பட்டுளது.

* *

விவாக வயதை நிர்ணயிக்கும் விஷயமாய்ப் பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறியவும், அதனால் ஏற்படும் சாதகபாதகங்களை ஆராய்ச்சி செய்யவும் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் அகில இந்தியா கமிட்டியில் ஸ்ரீமான் ஏ. ராமசாமிமுதலியார் அவர்கள் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

* *

தேன் கொட்டின விடத்தை வெந்நீரில் வைத்திருந்தால் விஷமிறங்கி விடுகிறதாம்.

* *

உலகத்திலுள்ள மிருகங்களில் ஒட்டகையும், பன்றியுமே நீந்தத் தெரியாதனவாம்.

* *

மனிதன் பிடித்துக் கொல்லாமலிருந்தால் திமிங்கலம் 600 ஆண்டுகள் வரை ஜீவித்திருக்குமாம்.

* *

லண்டனில் ஒருவர் நாடக மாதொருத்தியைக் காதலித்து வந்தார். இடையில் அவள் அவரை வெறுக்கத் தொடங்கினாள். ஒருநாள் ஒரு ஹோட்டலில் பலர் சூழ உணவருந்துகையில் அவர் "உன்னோடு கூடி வாழாத வாழ்வு ஒரு வாழ்வாகுமா" எனக்கூறி மாடியிலிருந்து விழுந்து மடிந்தார்.

* *

கல்கத்தா பிரஸிடென்ஸிகல்லூரியில் வானசாஸ்திர ஆராய்ச்சி வகுப்புக்காக 40000 ரூபாய் செலவில் நவமான கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

* *

மிஸ்மேயோ இந்தியாவுக்கு அடுத்த குளிர் காலத்தில் வருவாள். அவளது "இந்திய மாதா" எனும் புத்தகத்தில் லக்ஷம் பிரதிகள் அமெரிக்காவில் விற்பனையாகி யிருக்கின்றன.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# மதுபானம்.

வானஞ் சூழ்ந்த வையத்துள் ஒருவன் தன்னைப் புல்லோராலும் மேன்மையும் மகிமையு முடையவனெனச் சொல்லக் கருதுவோன் தான் எக்குலத்தில் எந்நிலையிலிருப்பினும் குடி என்னும் இழி தொழிலை முற்றும் நீக்கினவனாகவும், அத்தோடு வஞ்சகம், சூது, கபடு முதலிய தீக்குணங்களை ஒருங்கே நீத்தவனாகவுமிருத்தலவசியம். மேற் சொன்னவைகளை முற்றுங் களைந்த ஒருவன் கல்வி கேள்விகளை ஆராய்ந்து அதன்படி நடந்தால், தானெடுத்துக்கொண்ட நினைவுக்கேற்ப ஒருவாறு செய்யக்கூடுமென்பதற் கிடமுண்டு. இல்லையேல் அபகீர்த்தியே ஏர்படும்.

ஒளியும் ஒளிசான்ற செய்கையும் சான்
றோர்
தெளிவுடைய ரென்றுரைக்கும் தேசும்
களியென்னும்
கட்டுரையார் கோதப்படு மேல் இவை
யெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து

என்று முனைப்பாடியார் கள்ளுண்டலின் இழிவை எடுத்துக்கூறுகிறார். கற்றறியார்கள் தான் குடியிலுழல்கின்றார் என்று மட்டும் சொல்வதற்கில்லை. ஏராளமான பொருளைத் தாராளமாகச் செலவிட்டு வருஷக்கணக்காய் அரிய பெரிய விஷயங்களை ஆராய்ந்தறிந்து பட்டங்கள் பெற்றவர்களில் பெரும் பாலரும் மதுபானம் அமிதமாகக் கொள்வதைக் கண்கூடாய்க்காண்கிறோம். இன்னாரன்னோர் கற்றும் கல்லாதவரேயன்றி மற்றென்னவர்? இக்குடிகாரத்துரைகளும் மல்லினகிருல் தான் சுமார் நூறு ரூபாயாகவிருந்த கள் கடையின் குத்தகை தற்போது ஆயிரக்கணக்காகிவிட்டது போலும். அயல்நாட்டு பிராந்தி, ஒயின் பாட்டில்கள் இவர்களுக்கே சொந்தமாகிவிட்டன.

இதில் பெரும் நாள் குடிகாரர் வேறு. அதாவது வருஷத்தில் தீபாவழி, சங்கராந்தி, வருஷப் பிறப்பு முதலிய பண்டிகை தினங்களில் யாதொரு வேலையு மின்றி யிருப்பது இக்குடிக்காகவே என்பது இவர்களது சித்தாந்தம். தங்களுடைய மனைவி மக்களுடன் உண்டுடுத்தி உற்சாகத்துடனிருக்கும் இத்தகைய பெரும் நாட்களில், குடித்து கண்மூச்சுத் தெரியாமல் கூத்தாடுவதால் பெரும் நாள் வெறும் நாளாகப் போவதுமின்றி பெரும் இழவுவிழுந்தாற்போல் கூட்டமும், சண்டை சச்சரவும் உண்டாகிவிடுகின்றன. குடி மயக்கு நீங்கினதும் தாம் செய்த கோரணிகளை யறிந்து வருந்துகின்றனர். இவர்களது செய்கைதான் என்னே!

கள்ளுண்டலில் கெடுதலைப்பற்றி எண்ணிறந்த பெரிய வைத்திய நிணர்கள் தேக மெலிவு, தசைகளின் தளர்ச்சி, அஜீரணம் முதலியவைகள் ஏற்படுகின்றனவென்றும் அதனால்கணக்கற்ற வியாதிகளுக் கிடமாகிறதென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். சுருங்கக்கூறின் கள்ளுண்பது கெடுதலையே விளைவிக்கும். ஆகையால் குடியை நீக்கி நற்கதி பெற்றுய்ய வேண்டுகின்றேன். சுபம்!

ஓர் எஸ். எஸ். எல். ஸி. கிளாஸ்
மாணவர்.

## காமாவுடன் குஸ்தி போட்டி.

குஸ்தியில் உலகத்தில் சிறந்தவரென்று கூறிக்கொள்ளும் மிஸ்டர்பேட்பிஸன் சமீபத்தில் சிப்லிகோவைவென்ற பயில்வான் காமாவைத் தம்முடன் குஸ்திப் பந்தயத்திற்கு வருமாறு அழைப்பதாகப் பாரிஸிலிருந்து பயோனீர் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்.

# ஜீவபலி வேண்டாம்.

எல்லாவிரதங்களிலும் கொல்லாவிரதமே நல்ல விரதமெனத் தலைப்பாவமாய கொலைப்பாவத்தை நிறுத்த சாஸ்திரமுணர்ந்து கடவுள் தன்மையறிந்த மகான்களெல்லாம் கொலை செய்தல் கூடாது எனக்கூறி வந்திருக்கின்றனர்; கூறிவருகின்றனர். பாவஞ்சூழலோடு தேக நலத்திற்கும் கெடுதி விளைவிக்கக் கூடியது மாமிசம் என்று வைத்திய நிபுணர்கள் ஒருபுறம் அறைகிறார்கள். இத்தியாதி கேடு சூழ்ந்த மாமிசத்தைப் புசிப்பதினால் என்ன இன்பு இருக்கிறது? என்பதே நமது கேள்வி. நம் உடம்பை வளர்ப்பதற்குப் பிறிதொரு பிராணியைச் சற்று மிரக்கமின்றிக் கொன்று சாப்பிடுவது எவ்வளவு பாவமானது? பாவமிது; புண்ணிய மிது என்று பகுத்தறிந்து ஈசனை யடைய வேண்டிய நம் மனிதவர்க்கத்திற்கு இது அடுக்குமா? தம் நாவுருசிகொண்டு வயிறுநிறையத் தின்று வருவதற்காகப் பிற ஜீவனைத் தும்சம் செய்ய வேண்டாம்.

இக்கொலையிலும் ஒரு நேர்த்தி! அது ஆலயங்களில் ஆடு கோழிகளைக் கொண்டுபோய்ச் சுவாமிகளுக்குப் பலியிட்டுச் சாப்பிடுவது. இவர்கள் தெய்வபக்தர்களாம்! சுவாமி எதற்காகக் கும்பிடுவது? நம் அல்வினைகளையறுத் தெறிவதற்கன்றோ? குளிக்கப்போயும் சேற்றைப் பூசிக்கொண்டு வந்தது போல் பாவம் நீக்கப் போகிறோமென்று பாவம் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். சுவாமி இரக்கமுள்ளவரா? இரக்கமில்லாதவரா? இரக்கமுள்ள சுவாமி கொலை செய்யச் சொல்லுமா? இதைப் பகுத்தறிவுகொண்டு பார்த்தால் உண்மை விளங்கும். நாம் தின்று கெடுதி விளைவித்துக் கொள்வதோடு சுவாமியையும் நமது பங்காளியாக ஆக்கப்பார்க்கிறோம். சுவாமி இதற்கு ஒரு போதும் இணங்கார். ஆலயத்தில் ரத்தத்தால் அசுத்தப்படுத்தியதற்குக் கோபமே கொள்வார். எனவே சுவாமியைத் திருப்தி செய்கிறோமென்று ஆலயத்தைக் கொலைக்களமாய் ஆக்கிவிடவேண்டாம். அவரவர் மட்டில் புசித்துக் கொண்டிருந்தாலும் ஆலயத்தில் மட்டிலும் அசுசி பண்ணுதிருக்க முதலில் வேண்டிக்கொள்கிறேன். கொன்று தின்பது பாவமென்பதை அறிந்து இப்பாவச் செயலுக்காளாகாமல் விலகவேண்டும். ஆகாரத்திற்கு எத்தனையோ சத்துணவுப் பொருள்களிருக்கின்றன. அவையே நம் ஜீவனுக்கு அமிர்தம் போன்ற உணவுப் பொருள்கள். அவற்றை யுண்டு பிற ஜீவன்களுக்கு ஹானிவிளைவிக்காமல் புண்ணிய வான்களாக வாழவேண்டுவதே தேவ சம்மதம்.

நாடார் குல கனவான்களே!

நமது மகாஜன சங்கம் ஜீவகாருண்ய சீலத்தை யோம்பி முதற்படியாக 10–வது கான்பரன்ஸில் "நம்மவர் தேவாலயங்களில் ஜீவபலியிடுதல் கூடாது" என்று தீர்மானஞ்செய்து கவுன்ஸிலும் ஒப்புக்கொண்டு சமீபத்தில் ஸர்க்குலரும் அனுப்பியிருக்கிறது. நம் சமூக முன்னேற்றத்திற்கு ஆத்மார்த்த ஞானமும் ஒரு முக்கிய சாதனமாகையால் நமது சங்கம் போதிக்குமாறு தேவாலயங்களில் பலியிடுவதை நிறுத்தி மாமிசம் புசிப்பதை யறவேயொழித்துப் புண்ணிய சீலர்களாய் விளங்கவேண்டுகிறேன்.

மீ. சி. சுந்தரநாடார்,
போடிநாயக்கனூர்.

## கள்ளிக்குளம் பால்ய நாடார் சங்கம், கொழும்பு.

ஷை சங்கத்து மாதாந்திரக் கூட்டம் கடந்த 13—5—28-ல் இரவு 9-30 மணிக்கு சாசுவதத் தலைவர் ஸ்ரீமான் புளி. எசுவடிய நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. அவ்வமயம் ஞா. சூசைமுத்து நாடார் அவர்கள் "சங்கம்" என்பதைப் பற்றி உபந்நியாசித்தார்கள். அதன் பின் சில முக்கியமான விஷயங்களையும் ஆலோசித்து முடிவு செய்த பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது எனக் காரியதரிசி ஸ்ரீமான் புளி. ம. ம. நக்ஷத்திர நாடார் எழுதுகிறார்.

# தாலுகா போர்டில் நாடார்கள் வெற்றி.

சென்ற மார்ச்சுமீ 17உயில் நடைபெற்ற திருச்செந்தூர் தாலுகாபோர்டு எலெக்ஷனில்ஷைபிர்க்காவிற்கு2பேரும் ஆத்தூர் டிவிஷனுக்கு 2 பேரும், 19உயில் நடைபெற்ற ஸ்ரீ வைகுண்டம் தாலுகாபோர்டுஎலெக்ஷனில் தூத்துக்குடி பிர்க்காவுக்கு ஒருவரும், 26உ எலெக்ஷனில் சாத்தான்குளம் பிர்க்காவுக்கு ஒருவரும், ஆறுமுக மங்கலம் பிர்க்காவுக்கு 2 பேரும், 27உ எலெக்ஷனில் உடன்குடி பிர்க்காவுக்கு 2 பேருமாகப் பத்து நாடார்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள். மொத்தம் 18 ஸ்தானங்களில் 10 ஸ்தானங்கள் நாடார்களுக்குக் கிடைத்திருக்கின்றன. இவ்வெற்றியினளவு கண்டு நம் சமூகத்தினர் மகிழ்வு கொள்ளவேண்டியதுதான். எனினும் இதற்கும் குதர்க்கம் செய்ய நம்மவரில் ஒரு சிலர் கோடரிக்காம்புகளாய் நின்றதுபற்றி விசனியாதிருக்க முடியவில்லை. அன்னார்கள் இனியேனும் குல பாசங்கொள்ளுமாறு இறைவன் அருள் வாஞக. இவ்வெற்றி மகிழ்ச்சி காரணமாய் அடுத்த ஜூன் மீ வரப்போகும் திருச்செந்தூர் தாலுகா ஆள்வார்திருநகரி பிர்க்கா எலெக்ஷனிலும், ஸ்ரீ வைகுண்டம் தாலுகா ஷை பிர்க்கா எலெக்ஷனிலும் அசிரத்தை காட்டி விடாதிருக்கவேண்டும் என ஞாபகமூட்டுகிறேன். இன்னும் திருச்செந்தூர் தாலுகாவில் 2 ஸ்தானங்களும், ஸ்ரீ வைகுண்டம் தாலுகாவில் ஒரு ஸ்தானமும் நாடார்களுக்குக் கிடைக்க வேண்டியதிருக்கிறது. ஆகையால் நம் கனவான்கள் ஊக்கத்தோடுழைத்து அந்த ஸ்தானங்களையும் கைப்பற்றி நமது சுதந்திரத்தைப் பாதுகாப்பார்களாக.

நா. ராமசாமிநாடார்,
புதுக் குடி.

## பூமியின் கீழ் புதிய உலகம்.

பூமியினுள் பல ஆயிரக் கணக்கான அடிகளுக்குக் கீழே அழகான நந்தவனங்களும், ஆறுகளும், ஏரிகளும், வான வில்லுகளும் கண்டு பிடிக்கப் பட்டன. அந்த உலகத்தில் இருள் சூழ்ந்திருக்கின்றது. பூமியின் கீழ் சென்ற 40 வருடங்களாக ஆராய்ச்சி செய்து வரும் பிராஞ்சு தேசத்தின் ரசாயன சாஸ்திரியாகிய மிஸ்டர் ஹாடல் அதிக தீரமான காரியங்களைச் செய்து அந்தப் புதிய உலகத்தைக் கண்டு பிடித்தார். அவர், கயிறுகள், மெழுகு வர்த்திகள், வர்த்திக் குச்சுகள், சுத்தி, கத்திகள், சீதோஷ்ண நிலை காட்டும் கருவி, தூரம் அளவு காட்டும் கருவி, நாசியில் விஷக் காற்று நுழையாமல் தடுக்கும் கருவி ஆகிய இந்தச் சாமான்களையும் அவருடைய ஆராய்ச்சிக்கு வேண்டிய மற்றச் சாமான்களையும் ஒரு சிறு சாக்கில் போட்டு அந்தச் சாக்கை முதுகில் கட்டிக் கொண்டு தம் தேசத்திலுள்ள ராபனல் என்னும் எரி மலையின் வாய் வழியாக ஒரு கயிற்றேணியில் கீழே இறங்கி அந்த உலகத்தைக் கண்டு பிடித்தார். பூமிக்கு மேல் தம்முடைய நண்பர்களுடன் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பதற்காக அவர் தம் கழுத்தில் ஒரு டெலிபோனைக் கட்டிக் கொண்டிருந்தார். அந்த உலகம் இருளா யிருந்ததாம். இது பரியந்தம் அவரைத் தவிர வேறே யாரும் அந்த எரிவாய் வழியாகக் கீழே இறங்கிச் செல்ல முற்படவில்லை.

ஏழை ஆகாரத்திற்காக அலைகிறான். பணக்காரனோ கொஞ்சமாவது பசியோடு புசிக்க முடியாதா வென்று பார்க்கிறான்.

# மதிப்புரை.

## "குமரன்" ஆண்டுமடல்.

காரைக்குடி, "குமரன்" பத்திரிகையின் இவ்வருஷத்திய ஆண்டு மடல் ஒன்று எமது பார்வைக்கு வரப் பெற்றோம். "குமரன்" ஆற்றும் தேசத்தொண்டையும், அவனிடம் திகழும் செந்தமிழ் ருசியையும் தகராதார் தமிழ் நாட்டில் கற்றறிகுழாமில் இராரென்றே சாற்றலாம். இவ்வாண்டுமடலில் விஷயங்கள் தொடுத்திருப்பதில் ஆசிரியர் வெகு சிரத்தை காட்டி யிருக்கிறார். மடலாரம்பத்தில் தாயின் அன்பு விளக்கமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் ஓர் அழகிய வர்ணப்படம் கண்களைக் கவர்கிறது. மலாய் நாட்டு இந்துக்கோயில்களின் படங்களும், அவற்றின் சவிஸ்தாரமும் மற்றும் பல வேடிக்கைப்படங்களும் பிணைக்கப் பட்டிருக்கின்றன. விவாகப் பொருத்தமின்மை, தீண்டாமைக் கொடுமை, கிறிஸ்தவர் பெருந்தகை, பெண் வருத்தம்முதலியவை குறித்து சித்திரப்படங்களுடன் தீட்டப்பட்டிருக்கிறது. பொறிக்கப் பட்டிருக்கும் கட்டுரை களத்தனையும் பொன்னேபோல் போற்றற்குரியனவாகும். இம்மிளிர்வுறு கட்டுரைகள் தேர்ந்த கற்றறிவாளர்களால் வரையப்பட்டிருக்கின்றன. இம்மடலைத் தமிழ்மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெறுவார்களாக. விலை ரூ 1—4—0.

## க்ஷத்திரிய பால்ய நாடார் ஐக்கிய சங்கம், தளவாய்புரம்.

ஷை சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் நாடார் எலிமெண்ட்டரி ஸ்கூலில் 11—5—28-ல் மாலை எட்டு மணிக்கு ஸ்ரீமான் தா. குருசாமிநாடாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. ஸ்ரீமான் சி. சோமசுந்தரநாடாரவர்கள் கடவுள் வாழ்த்துப்பாடியபின் ஸ்ரீமான் மு. சுப்பையாநாடாரவர்கள் கல்வியைப்பற்றி உபந்நியாசஞ்செய்தார்கள். அவ்வுபந்நியாசத்தில் கல்வியைப்பற்றி விளக்க விரிவுரை நிகழ்த்தி "கம்பரும் சோழனும்" என்னும் சரித்திரத்தை வெகு உருக்கமாய் எடுத்தோதினர். அதன் பின் ஸ்ரீமான் பிலிப்ஸ் நாடாரவர்கள் கல்வியைப் பற்றித் தெளிவாயும் உருக்கமாயும் பேசினார்கள்.

முடிவுரையாக அக்கிராசனாதிபதி அவர்கள் கல்வி அதிக நன்மையைப் பயக்கிறபடியால் ஒவ்வொருவரும் அதை முன்னேற்றத் துக் கொண்டுவர வேண்டியது அவசியம் என்று கூறி முடிக்க சந்தோஷ கரகோஷத்துடன் 10 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

பு. மு. மா. பழனியப்பநாடார்,
காரியதரிசி.

## ஐக்கிய சங்க வாசகசாலை, பிரகாசபுரம்.

மேற்கண்ட வாசகசாலையின் மகாஜன சபைக்கூட்டம் 10-5-28-ல் காலை 10-மணிக்கு ஷை வாசகசாலைக்கட்டடத்தில் ஸ்ரீ எஸ். டேவிட் மிக்கேல் பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. முதலாவது காரியதரிசியால் முந்தின கூட்டத்தின் நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. பின்பு புதிதாகச் சில சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அப்புறம் காரியதரிசியால் வரவு செலவுக் கணக்குகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் இனி மேல் ஏற்படக்கூடிய செலவுகளும் திட்டம் கட்டப்பட்டன. மற்றும் அனேக தீர்மானங்கள் ஏக மனதுடன் நிறைவேறின பிறகு மத்தியானம் 2–மணிக்குக்கூட்டம் இனிது கலைந்தது.

த. வே. சாமுவேல்,
காரியதரிசி & பொக்கிஷதார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

## ஏழாம் அத்தியாயம்.

### 4. வேஷம் பூண்டு தப்பியது.

நான் உடனே நிலைமையை அறிந்து கொண்டேன். போலீஸ் சேவகன் போல் வேடம் பூண்டு ரஸ்டம்ஜியின் வீட்டை விட்டுக் கிளம்பினேன். போலீஸ் உத்தியோகஸ்தரும் நானும் பத்திரமாய்ப் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தோம். இதற்கிடையில் மிஸ்டர் அலெக்ஸாண்டர் பாட்டுப்பாடியும் வேடிக்கையாய்ப் பேசியும் கூட்டத்தைக் 'குஷி'ப்படுத்திக் கொண்டிருந்தார். நான் போலீஸ் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்த விவரம் அவருக்குத் தெரிய வந்ததும் அவர் வேடிக்கைப் பேச்சை நிறுத்திக் கூட்டத்தை நோக்கி "உங்களுக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டார்.

"எங்களுக்குக் காந்தி வேண்டும்."

"அவரை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அவரைக் கொளுத்தப் போகிறோம்."

"அவர் உங்களுக்கு என்ன தீங்கு செய்தார்?"

"அவர் இந்தியாவில் எங்களைத் திட்டினார்; நேட்டாலை இந்திய மயமாக்க முயல்கிறார்."

"அவர் வெளியில் வராவிட்டால் என்ன செய்வீர்கள்?"

"இந்த வீட்டையே எரித்து விடுவோம்."

"அவருடைய மனைவி மக்கள் வீட்டில் இருக்கிறார்கள். வேறு ஸ்திரீ புருஷர்களும் இருக்கிறார்கள். குழந்தைகளையும், பெண்களையும் எரிக்க உங்களுக்கு வெட்கமா யிராதா?"

"அந்தப் பொறுப்பு உங்களையே சாரும். வேறுவழியில்லாமல் பண்ணினால் நாங்கள் என்ன செய்வது? அவரைத் தவிர வேறு யாரையும் துன்புறுத்த நாங்கள் விரும்பவில்லை. காந்தியை எங்களிடம் ஒப்புவித்து விடுங்கள்; போதும். நீங்கள் குற்றவாளியை எங்களிடம் ஒப்புவியாமலிருந்து விட்டு, அவரை நாங்கள் கைப்பற்றும் முயற்சியில் பிறரும் துன்பமடைந்தால் அதற்காக எங்கள் மீது குற்றஞ் சுமத்துவது நியாயமா?"

### "போய் போய்".

போலீஸ் தலைவர் புன்னகை செய்தார். பிறகு நான் ரஸ்டம்ஜியின் வீட்டிலிருந்து வெளியேறி வேறோரிடம் போய்ச் சேர்ந்து விட்டதாக ஜனக் கூட்டத்துக்கு அறிவித்தார். கூட்டத்தார் உரக்கச் சிரித்தார்கள். "பொய் பொய்" என்று கூறினார்கள். அப்போது போலீஸ் தலைவர் கூறியதாவது:—

"நல்லது; என்னை நீங்கள் நம்பாவிடில் உங்களில் மூன்று நான்கு பேர் அடங்கிய ஒரு கமிட்டியை நியமியுங்கள். மற்றவர்கள் வீட்டுக்குள் நுழையக்கூடாது. அக்கமிட்டியார் வீட்டுக்குள் தேடி காந்தியைக் காணவிட்டால் நீங்கள் எல்லோரும் அமைதியாய் வீடு திரும்புவதாக வாக்களிக்கவேண்டும். இன்று நீங்கள் நிதானந் தவறிப் போலீஸுக்குக் கீழ்ப்படிய மறுத்தீர்கள். இது உங்களுக்கே அபகீர்த்தி தருவதாகும். போலீஸுக்கு அவமானம் எதுவுமில்லை. ஆகையால், போலீஸார் உங்களைத் தந்திரத்தினால் ஏமாற்ற வேண்டியதாயிற்று. உங்கள் எதிரியை அவர்கள் வேறிடம் கொண்டு போய்விட்டனர். இதற்காக நீங்கள் போலீஸைக் குற்றங் கூறுவதில் பயனில்லை. போலீஸாரை நீங்களே நியமித்தவர்கள். அவர்கள் தங்கள் கடமையையே செய்திருக்கிறார்கள்".

போலீஸ் தலைவர் உறுதியுடனும் ஆனால் நயமாகவும் பேசிய படியால் ஜனக் கூட்டம் அவர் விரும்பிய வாக்குறுதியை யளித்தது. ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இவர்கள் ரஸ்டம்ஜியின் வீட்டைத் துருவித் துருவித் தேடினார்கள். பின்னர், போலீஸ் தலைவர் சொன்னது உண்மைதானென்றும், அவர் தங்களை ஏமாற்றிவிட்டாரென்றும் கூட்டத்தினிடை அறிவித்தார்கள். கூட்டத்தார் மிக்க ஏமாற்றமடைந்தார்களெனினும், மேலே விஷமம் எதுவும் செய்யாமல் கலைந்து போய்த் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றி வைத்தனர். இது 1886ம் வருஷம் ஜனவரி மீ 13 உ நடந்தது.

### முடிவு நன்மையே.

அதே நாள் காலையில், கப்பலின் குவாரண்ட்டைன் நிர்ப்பந்தம் நீக்கப்பட்டதும், டர்பன் பத்திரிகையொன்றின் பிரதிநிதி கப்பலுக்கு வந்து என்னைக் கண்டார். அவர் என்னை எல்லா விவரங்களும் கேட்டார். என் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றங்கள் ஆதாரமற்றவை யென்று அவருக்குத் திருப்தி யுண்டாகும் வண்ணம் காட்டுதல் மிக எளிதாயிருந்தது. நான் சிறிதேனும் மிகைப்படுத்தி எதையுங் கூறவில்லையென்று அவருக்கு எடுத்துக் காட்டினேன். நான் என்னுடைய கடமையையே செய்தேனென்றும், அதைச் செய்திராவிடில் ஆண்மகன் என்ற பெயருக்கே தகுதியற்றவனாவேன் என்றும் எடுத்துக் கூறினேன். இந்த விவரங்கள் எல்லாம் மறுநாள் பத்திரிகைகளில் வெளியாயின. வெள்ளைக்காரர்களில் அறிவுடையவர்களெல்லாரும் தங்கள் தவறை ஒப்புக்கொண்டார்கள். பத்திரிகைகள் நேட்டால் வெள்ளைக்காரர்களின் கட்சியில் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்தனவாயினும், அதே சமயத்தில் என்னுடைய செயலை முற்றும் ஆதரித்து எழுதின. இதனால் என்னுடைய கீர்த்தியும், இந்திய சமூகத்தின் மதிப்பும் அதிகமாயின. இந்தியர்கள் ஏழைகளாயினும், அவர்கள் கோழைகள் அல்லரென்றும், இந்திய வியாபாரிகள் கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் தங்கள் தேசத்துக்காகவும், சுயமரியாதைக்காகவும் போராடத் தயாராயிருக்கிறார்களென்றும் நிரூபிக்கப்பட்டன.

இவ்வாறு இந்திய சமூகம் கஷ்டப்படவும், தாதா அப்துல்லா ஏராளமான நஷ்டத்துக்குள்ளாகவும் நேர்ந்ததாயினும் முடிவு சமூகத்துக்கு முற்றும் நன்மையாகவே இருந்தது. இந்தியர்கள் தங்களுடைய வலிமை இவ்வளவென்று அறிய ஒரு சந்தர்ப்பம் பெற்றார்கள். இதன் பலனாக அவர்களுடைய சுய நம்பிக்கை வளர்ந்தது. எனக்கோ அந்நிகழ்ச்சி ஒரு சிறந்த அநுபவமாயிருந்தது. அந் நாளைப் பற்றி எண்ணும்போது ஆண்டவன் என்னைச் சத்தியாக்கிரகத்துக்குத் தயார் செய்து வந்தார் என்றே நான் கருதுகிறேன்.

### சேம்பர்லின் தந்தி.

நேட்டால் சம்பவங்கள் இங்கிலாந்திலும் எதிரொலி செய்தன. குடியேற்ற நாட்டு மந்திரி மிஸ்டர் சேம்பர்லின், என்னை அடித்தவர்களைக் கைது செய்து எனக்கு நியாயம் வழங்கும்படியாக நேட்டால் அரசாங்கத்துக்குத் தந்தியடித்தார்.

இதன்மேல் நேட்டால் அரசாங்கத்தின் அட்டர்னி ஜெனரலான மிஸ்டர் எஸ்கோம்ப் என்னை யழைத்தார். மிஸ்டர் சேம்பர்லினின் தந்தியைப்பற்றிக் கூறி, எனக்கு நேர்ந்த தொல்லைகளுக்காக வருத்தந் தெரிவித்ததுடன், நான் அடிக்கப்பட்டதின் விளைவு இந்தமட்டோடு போனதற்காகத் தமது மகிழ்ச்சியையும் அறிவித்தார். பின்னர் அவர் கூறியதாவது:—"உங்களுக்காவது உங்கள் சமூகத்தைச் சேர்ந்த வேறு எவருக்காவது தீங்கு நேர வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு அணுவளவுமில்லையென்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். ஒரு வேளை நீங்கள் உபத்திரவிக்கப்படலாமென்று நான் பயந்தபடியாலேயே இரவில் இறங்கும்படியாக உங்களுக்குச் சொல்லி யனுப்பினேன். என் யோசனை தங்களுக்குப் பிடிக்கவில்லை. மிஸ்டர் லாட்டனின் புத்திமதியைக் கேட்டதின் பொருட்டு உங்கள்மீது குற்றங்கூற நான் சிறிதும் விரும்புகிறேனில்லை. உங்களுக்கு உசிதமென்று தோன்றியதைச் செய்யப் பூரண உரிமை உண்டு. மிஸ்டர் சேம்பர்லினின் கோரிக்கையை நேட்டால் அரசாங்கத்தார் முற்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். குற்றஞ் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்றே நாங்கள் விரும்புகிறோம். உங்களை அடித்தவர்களில் எவரையேனும் நீங்கள் அடையாளங் கண்டுபிடிக்க முடியுமா?"

### "குற்றம் உங்களுடையது".

இதற்கு நான் பின்வருமாறு பதிலளித்தேன்:—"ஒருவர் இருவரை அடையாளங் கண்டுபிடித்துக் கூறுதல் சாத்தியமாயிருக்கலாம். ஆனால் முதலிலேயே உங்களுக்கு ஒன்று கூறிவிட விரும்புகிறேன். என்னை அடித்தவர்கள்மீது வழக்குத் தொடர்வதில்லையென்று முன்னமே நான் தீர்மானித்து விட்டேன். குற்றம் அவர்களுடையது என்பதாக எனக்குத் தோன்றவில்லை. அவர்களுக்குக் கிடைத்த தகவல்கள் எல்லாம் அவர்களுடைய தலைவர்கள் மூலம் கிடைத்தனவே யாகும். அத்தகவல்கள் சரியா, தவறா என்று அவர்கள் சீர்தூக்கி ஆராயவேண்டுமென எதிர்பார்த்தால் மிகையாகும். என்னைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டவைகளெல்லாம் உண்மையாயின், அவர்கள் கொதிப்படைந்து கோபத்தில் தவறு செய்தல் இயல்பேயல்லவா? அதற்காக அவர்கள் மீது நான் குற்றங் கூறமாட்டேன். கொதிப்படைந்த ஜனக் கூட்டம் எப்போதும் இம்மாதிரிதான் நீதி செலுத்த முயல்வது வழக்கம். யார் மீதாவது குற்றம் உண்டானால், அவர்கள் வெள்ளைக்காரக் கமிட்டியாரும், நீங்களும், நேட்டால் அரசாங்கத்தாருமேயாவர். ராய்ட்டர் உண்மையைத் திரித்துச்செய்தியனுப்பியிருக்கலாம். ஆனால் நான் நேட்டாலுக்குத் திரும்பிவருகிறேன் என்று தெரிந்திருக்கும் போது உங்களுடைய கடமையென்ன? கமிட்டியினுடைய கடமைதான் என்ன? இந்தியாவில் என்னுடைய செயல்களைப் பற்றி உங்கள் ஐயங்களை என்னிடம் கேட்டிருக்க வேண்டும். என்னுடைய சமாதானத்தை அறிந்துகொண்டு பின்னர் உசிதமான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கவேண்டும். நீங்களும் கமிட்டியும் அப்படிச் செய்யவில்லை. என்னை அடித்ததற்காக உங்கள் மீதாவது கமிட்டியின் மீதாவது வழக்குத் தொடரவும் முடியாது. அது சாத்தியமாயிருந்தாலும் நீதி மன்றத்தில் பரிகாரம் தேட நான் விரும்பேன். நேட்டால் வெள்ளைக்காரர்களின் நன்மைகளைப் பாதுகாக்க அவசியமென்று கருதியவற்றை நீங்கள் செய்தீர்கள். இஃது அரசியல் விஷயம். எனவே அரசியல் துறையில் உங்களுடன் போராடுவதே என் கடமையாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஜனத் தொகையில் பெரும் பகுதியினரான இந்தியர்கள் வெள்ளைக்காரர்களுக்கு எவ்விதத் தீங்கும் இழையாமல் தங்கள் உரிமைகளையும் சுயமரியாதையையும் பாதுகாக்க உறுதி கொண்டிருக்கிறார்களென்று உங்களுக்கும் மற்ற வெள்ளைக்காரர்களுக்கும் நான் நிரூபித்துக் காட்ட வேண்டும்".

### "எழுதிக் கொடுங்கள்."

மிஸ்டர் எஸ்கோம்ப்:-"நீங்கள் சொல்வது எனக்கு விளங்குகிறது. அதை நான் பாராட்டுகிறேன். உங்களைத் தாக்கியவர்கள் மீது நீங்கள் வழக்குத் தொடர மறுப்பீர்களென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. நீங்கள் வழக்குத் தொடர்ந்திருந்தால் நான் சிறிதும் அதிருப்தியடைந்திருக்க மாட்டேன். ஆனால் வழக்கு நடத்துவதில்லை யென்று நீங்கள் தீர்மானித்துவிட்டபடியால், நீங்கள் மிகவும் சரியான முடிவுக்கே வந்துள்ளீர்களென்று கூற நான் தயங்கவில்லை. உங்களுடைய தன்னடக்கத்தினால் உங்கள் சமூகத்துக்கு இன்னும் சிறந்த தொண்டு செய்தவர்களாவீர்கள். அதே சமயத்தில் நேட்டால் அரசாங்கத்தை ஒரு சங்கடமான நிலைமையிலிருந்து தப்புவிக்கிறீர்கள் என்றும் நான் ஒப்புக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் விரும்பினால் அரசாங்கத்தார் உங்களை அடித்தவர்களை நிச்சயம் கைது செய்வார்கள். ஆனால் அது வெள்ளைக்காரர்களுக்கு அதிகக் கோபத்தை உண்டாக்குமென்றும், அரசாங்கத்தின் மீது இல்லாத குறைகளெல்லாம் கூறப்படும் என்றும் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. எந்த அரசாங்கத்துக்குத் தான் அது விருப்பமாயிருக்கும்? ஆனால் வழக்குத் தொடருவதில்லையென்று நீங்கள் முடிவாகத் தீர்மானித்திருந்தால், அவ்வாறு ஒருவாக்கு மூலம் எழுதித்தர வேண்டுகிறேன். நம்முடைய சம்பாஷணையின் சாரத்தை மிஸ்டர் சேம்பர்லினுக்கு அறிவிப்பது மட்டும் போதாது. உங்கள் வாக்குமூலத்தின் சுருக்கத்தையும் தந்தி மூலம் அனுப்பவேண்டும். ஆனால் இப்பொழுதே எழுதித் தரவேண்டுமென்று உங்களை நான் கேட்கவில்லை. உங்கள் நண்பர்களைக் கலந்து கொள்ளுங்கள். மிஸ்டர் லாட்டனுடனும் ஆலோசியுங்கள். அப்படிக் கலந்தாலோசித்த பிறகும் உங்கள் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவில்லையானால் எனக்கெழுதுங்கள். ஆனால் உங்களுடைய வாக்குமூலத்தில், உங்களுடைய சொந்தப் பொறுப்பின் மேல் உங்களை அடித்தவர்கள் மீது வழக்குத் தொடர மறுப்பதாய்த் தெளிவாகச் சொல்ல வேண்டும். அப்போதுதான் அதை நான் உபயோகித்துக்கொள்ள முடியும்."

### வாக்கு மூலம்.

அப்போது நான் கூறியதாவது:—"இது சம்பந்தமாக என்னை நீங்கள் அழைத்தீர்கள் என்றே எனக்குத் தெரியாது. இது குறித்து நான் யாரையும் கலந்து கொள்ளவில்லை; கலந்துகொள்ளும் விருப்பமும் கிடையாது. கப்பலிலிருந்து மிஸ்டர் லாட்டனுடன் நான் போகத் தீர்மானித்தபோது, அதனால் தீங்கு நேரிட்டால் யாரையும் நொந்துகொள்ளக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டேன். ஆதலின் என்னை அடித்தவர்கள் மீது வழக்குத் தொடருவதைப்பற்றிச் சிந்திப்பதற்கேயில்லை. இஃது எனக்கு ஒரு சமயப்பிரச்சனையாகும். இந்தத் தன்னடக்கத்தினால் எனக்கும் என் சமூகத்துக்கும் நன்மை செய்வேன் என்று உங்களைப் போலவே நானும் நம்புகிறேன். ஆதலின் பொறுப்பு முழுவதையும் நானே ஏற்றுக்கொண்டு நீங்கள் கேட்கும் வாக்கு மூலத்தை இங்கே-இப்போதே எழுதித்தருகிறேன்." அவ்வாறே வெறுங்காகிதம் அவரிடமிருந்து வாங்கி வாக்குமூலம் எழுதிக் கொடுத்தேன்.

---

(2-ம் பக்கத்தின் தொடர்பு)

யிருக்க நாமிது வரை யிப்படி நடந்தது தவறு. இறைவன் எத்தனையோ தடவைகள் எச்சரிக்கை செய்திருக்கிறார். "கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே" யென்பது பொய்யாமா? கெடு மதி கண்ணுக்குத் தோன்றா தென்பது அநுபவ மொழியே. வீடு விட்டு வெளி யேறி வெகு நாளாச்சு. விவேக மற்ற புத்தியினால் சுகமும் போச்சு. பாடுபட்டுத் துன்ப மதை அநுபவித்தோம் என்று எண்ணி விட்டு அவ்விடம் சிறிது நேரம் தங்கி ஓய் வெடுத்துக் கொண்டார். மாலை படுத்தவர் மறு நாட் காலை வெய்யி லுதவியால் விழித்தார். எழுந்து சென்று கங்கையில் மூழ்கினார். ஸ்நானம் முடித்துக் கொண்டு அன்புரு கொண்ட காசி விஸ்வ நாத ராலய மடைந்தார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection